Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-71 மார்கழி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00



## இமாலய பிரகடனம்

- ஈழத்தமிழினம் இனியென்ன செய்ய வேண்டும்?
- தடம் மாறுகின்றார்களா தமிழ் இளையோர்கள்?
- இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு (பாகம் –02)

**ஆய்வு–அறிவு–நிமிர்வு**

# ஈழத்தமிழினம் இனியென்ன செய்ய வேண்டும்?



கேஷிஹன் இளமுருகநாதன்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

இனத்தின் விடுதலையெனும் இணையற்ற இலக்குடன் பயணித்த மறவர் வழி வந்தும் வரலாறு மறந்த இரண்டாயிரக் குழவிகளின் பட்டியலில் இருந்து நழுவத் துடிக்கும் தமிழினத்தின் தன்னிகரற்ற காதலன் என என்னை முதலில் அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். வரலாற்றுத் தடங்களை தொட்டோ, கேட்டோ உணராதவனால் உறுதியான உலகம் நினைவுகூரக்கூடிய வரலாற்றை படைக்க இயலாது. எம்மினத்தின் ஐந்து தசாப்தத்திற்கு அண்மித்த அளப்பரிய போராட்டத்தினையோ, ரணங்களையோ நேரடியாக நான் அனுபவித்ததில்லை. மாறாக மறைமுக வடுக்கள் இன்னமும் கூட வலிக்கச் செய்கின்றன.

ஒரு இனத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள நாம் செய்யக் கூடிய குறைந்தபட்ச முயற்சியே வரலாறுகளை திரிபுகளின்றி வருங்கால சந்ததிகளின் கைகளில் சேர்ப்பதாகும். வரலாறு எங்கள் வழிகாட்டி என்றுரைத்த அண்ணலின் வழிவந்த வாரிசுகள் வரலாற்றை மறந்திருப்பது மரணதண்டனைக் குற்றத்தின் வரிசையில் அல்லவா சேரும்? எம்மினம் கடந்து வந்த பாதையிலிருந்து இன் றைய இளைய தலைமுறை கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும் விட்டுச் செல்ல வேண்டிய விடயங்களும் ஏராளமிருக்கின்றன.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த மொழியென்றும் இன மென்றும் அழைத்துக் கொள்வதால் மாத்திரம் பயனில்லை. இன்றைய தலைமுறையே எம் வரலாறு அறியாமல் இருப்பது எத்தகைய கொடுமையென்பதை கற்பனை செய்யும் போதே இதயம் கனக்கிறது. கடந்து வந்த பாதைகளில் இருந்து கற்றுக் கொண்ட படிப்பினைகளின் உத்வேகத்துடனும் ஈட்டிக் கொண்ட அனுபவங் களின் உறுதுணையுடனும் நாம் அடுத்த அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டிய கால கட்டத்தை கடந்து கொண்டிருக்கிறோம். ஆயு தப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு பதினா ன்கு ஆண்டுகள் கடந்தும் இன்றும் நாம் அதே இடத்தில் அனாதைகளாக நின்று கொண் டிருக்கிறோம். அரசியல், பொருளாதாரம், கலா சாரம், கல்வி என்று துறைகள் அனைத்திலும் கையாலாகாதவர்களாக கலங்கி நிற்கிறோம்.

முப்படை கட்டி தனியரசு நடாத்திய தனி த்துவமான இனமொன்று இன்று இலக்கின்றி பயணிப்பது பெருங்கவலைக்குரிய விடயமென் பதில் ஐயமேதுமில்லை. நாட்டின் பொருளாதார, அரசியல் ஸ்திரமற்ற நிலைகளும் நலிவுற்ற எம் சமூகத்தின் இனம் பற்றிய சிந்தனையை மேலும் இழிவாக்கிக் கொண்டே செல்கின்றன. இன்றைய இளைஞர்கள் ஒவ்வொருவரினதும் இலட்சியம் கனடா தேசமேயன்றி கரிகாலனின் கனவு தேசமல்ல. வெறுமனே பொறுப்பற்ற சமூ கம் என்று இன்றைய சந்ததியினரை குற்ற வாளிக் கூண்டுகளிலே ஏற்றி விட்டு எட்ட நின்று வேடிக்கை பார்க்க முடியாது. தமிழர் சமூகம் பயணிக்க வேண்டிய பாதையை சரிவர செப்பனிட்டு முறையான கட்டமைப்புடன் வழி நடத்த தவறிய, இனம் சார்ந்து சிந்திக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் ஒவ்வொருவரும் இதற்கான பொறுப்பினை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

நடந்தவைக்காக நம்மை நாமே நொந்து கொள்வதால் பயனொன்றும் இல்லை மாறாக இந்நிலையிலிருந்து மீள்வதற்கான மாற்றுவழி குறித்து சிந்திப்பதே உசிதமானது. அது குறித்த எமது நகர்வுகள் எவ்வாறானதாக அமைய வேண்டுமென்பதை ஆராயலாம். அடிப்படைத் தேவைகளை அடைந்து கொள்ள இயலாத மனி தனால் அதைத் தாண்டி வேறு விடயங்களை பற்றி சிந்திக்க முடியாதல்லவா? அவனுடைய தேடல் மூவேளை உணவிலும் உடை, உறை யுள் சார்ந்து இருப்பதில் தவறில்லை. அந்த தேடலை செய்யும் அதேவேளை, ஒரே மொழி, கலாசாரம் என்பவற்றை கொண்டிருந்து, ஒரே அடக்குமுறைக்கு முகம் கொடுத்து அதற்கும் மேலாக ஒரே கனவுடன் கூட்டிக் கட்டப்பட்ட ஒரு தேசிய இனமாக அனைவருக்கும் அளப்பரிய பொறுப்பிருக்கிறது.

எமது சமூகத்தை பல்துறை சார்ந்து பலப்பட்ட அனைத்து வழிகளிலும் வளப்பட்ட கட்டமைப்பாக செதுக்கி எடுப்பதை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, கல்வி ரீதியாக என ஒவ்வொரு துறை சார்ந்தும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் முறையான வழிகாட்டுதல்களுடன் நாம் நீண்ட கால இலக்குகளை நிர்ணயித்தாக வேண்டும். ஆகவே எமது தரப்பில் முதலில் துறை சார் நிபுணத்துவம் வாய்ந்த, அரசியல் கலப்ப ற்ற கட்டமைப்புகளும் குழுக்களும் தோற் றம் பெற வேண்டும். அவ்வாறான பொதுக் கட்டமைப்புகள் குறித்த துறை சார்ந்து எம்மினத்தின் வளர்ச்சி பற்றி செயற்றிட்டங் களை முன்னெடுக்க வேண்டும். ஒவ்வோர் அமைப்புகளிலும் மூத்தோர், பெண்கள், இளை ஞர்கள் என அனைவரினதும் பங்குபற்றுதலு டன் புத்தாக்க சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு அதி உத்வேகத்துடன் பயணிக்க வேண்டும் மாறாக பழைய பல்லவியின் பிரகாரம் தேங்கி நின்று விடக் கூடாது.

தலை நிமிர்ந்து நின்றிருக்க வேண்டிய இனம், இன்று சிலரின் தன்னலத்தால் சின்னா பின்னமான வரலாறுகள் நாம் ஆழப் படிக்க வேண்டிய பாடங்களை விட்டுச் சென்றிருக்கின் றன. தியாகத்தின் அர்த்தமாக இன்னுயிர் நீத்த மறவர்களின் அர்ப்பணிப்பு எமக்கு இனத்தின் மீதான காதலை துளிர்க்கச் செய்து கொண்டே இருக்கிறது. இவையெல்லாம் வெறுமனே நினை வேந்தல் நிகழ்த்தவும், சமூக வலைத்தளங்க ளில் பதிவுகளை பகிர்ந்து கொள்வதற்காகவும் இல்லை. இவற்றை சிரமேற்கொண்டு இலக்கு நோக்கி இன்னமும் உறுதியுடன் அடியெடுத்து வைக்க வேண்டும்.

அந்த இலக்கு என்னவென்ற கேள்வி எழலாம். சமூக,பொருளாதார, அரசியல்,கலாசார,

( 19 ஆம் பக்கம் பார்க்கவும் )

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## மீளமுடியாத பெரும் பொருளாதார சூறாவளிக்குள் சிக்கியுள்ள மக்கள்

ஆட்சியாளர்களின் தவறால் இன்று நாடு மீளமுடியாத பெரும் பொருளாதார சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளது. ஆனால், இதற்கான விலையை செலுத்துவது அவர்கள் அல்ல, சாதாரண அப்பாவி மக்கள் தான். மின்சாரக் கட்டணத்தில் இருந்து எரிபொருள் வரை எல்லாமே கடந்த இரு வருடங்களுக்குள் மூன்று மடங்கு விலையேற்றத்தை கண்டுள்ளன. இவற்றின் விலையேற்றங்களை தொடர்ந்து ஒரு தொடர் நிகழ்வாக மீதி எல்லா பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

நாடு முழுவதும் வைத்தியர்களுக்கும், மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மருத்துவமும் பெரும் சரிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. தை 2024 இல் இருந்து மதிப்புக் கூட்டு வரி (VAT) 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உற்பத்திச் செலவு அதிகரிப்பதால் விற்பனை விலையும் அதிகரிக்கும். மக்களிடம் வாங்கும் திறன் இன்மையால் தொழிற்சாலைகள் திவாலடைந்து பொருளாதாரம் மேலும் சரிவை சந்திக்கும்.

அன்றாடம் மக்கள் அவசியம் பயன்படுத்தும் பொருள்களுக்கும் VAT வரி விதிக்கப்பட்டுள்ளமை தான் அபாயகரமானது. மக்களுக்கு போதிய வருமானமில்லை. பொருட்களின் விலைகள் தாறுமாறாக மூன்று மடங்கு அதிகரித்தமை போல் மக்களின் வேதனங்களோ, கூலிகளோ அதிகரிக்கவில்லை. இதனால் மார்கழி இறுதிப்பகுதி பண்டிகை காலங்களில் மக்களின் கொள்வனவு திறன் குறைந்துள்ளதாக பல்வேறு தரவுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. புதிய ஆண்டில் வரும் காலாண்டில் மாணவர்களுக்கு அப்பியாச புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கே பெற்றோர் திண்டாடும் நிலை வந்துள்ளதாக ஆய்வொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பதாக அரசாங்கம் கடந்த பாதீட்டில் கூறி இருந்தது. அதற்கேற்றால் போல் அரசாங்கத்துக்கு வருமானம் இல்லாதவிடத்து புதிதாக பணத்தை அச்சிட்டு வழங்கினால் பணவீக்கம் மீண்டும் எகிறும்.


சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய தான் வரி அறவீடுகள் உச்சமடைந்துள்ளன. புதிய ஆண்டு தை முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும். இதையும் தாண்டி பொதுமக்களிடமிருந்து பல்வேறு வகையிலும் வரிகளை வசூலிக்க பல்வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

உயர்மட்டத்திலுள்ள ஒரு சதவீதமான இலங்கையர்கள் நாட்டின் மொத்த சொத்துக்களில் 31 சதவீதமானவற்றை தம்வசம் வைத்திருக்கிறார்கள். ஆனால் கீழ்மட்டத்திலுள்ள 50 சதவீதமானோரிடையே நாட்டின் மொத்த சொத்துக்களில் வெறும் 4 சதவீதத்தை விடவும் குறைவான சொத்துக்களே பகிரப்பட்டுள்ளன. 10 சதவீத செல்வந்தர்கள் மொத்த சொத்துக்களில் 50 சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை தொடர்ந்தும் அனுபவிப்பதாகவும், வருமான பங்கீட்டிலும் இலங்கை சமத்துவமற்ற நிலையில் காணப்படுவதாக ஐக்கியநாடுகளின் அபிவிருத்தி செயற்திட்டத்தால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை மக்களின் பொருளாதார ரீதியான நிலை தெளிவாக கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

டெங்கு பரவலும் கொரோனா வைரஸின் புதிய திரிபும் தமிழகத்தில் பரவியதை தொடர்ந்து இங்கும் அந்த அறிகுறிகளுடன் சிலர் இனங்காணப்பட்டுள்ளனர். இவையெல்லாம் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு பலத்த அடிகள். இதையும் தாண்டி 2024 ஆம் ஆண்டு இலங்கைக்கு தேர்தல் ஆண்டாக அமைய போகின்றது. அந்த செலவீனங்களும் அப்பாவி மக்களின் தலையில் தான் விழ போகின்றன. கத்தியின் விளிம்பில் பயணிக்கிறது இலங்கையின் பொருளாதாரம். இதனை சீர் செய்வதற்கு அடிப்படை நாட்டில் தொடரும் இனப்பிரச்சினை உரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

-செ. கிரிசாந்-

# தடம் மாறுகின்றார்களா இளையோர்கள்?



செல்வின்



**யா**ழ்ப்பாணத்தில் இளைஞர்களுக்கான களியாட்டங்கள் இசை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக பல நிறுவனங்கள் இப்போது ஆர்வம் கொண்டு செய்ய தொடங்கி உள்ளார்கள். பெரும்பாலான நிறுவனங்கள் வெளியூரை சேர்ந்தவை. அவற்றுள் சில யார் என்று தங்களை பெரியளவில் அடையாளம் காட்டி தராதவை. இதனால் மக்கள் மத்தியில் பரவலான சந்தேகம் ஒன்று வந்திருக்கின்றது. எமது இளைஞர்களை வேறொரு திசையில் திருப்புவதற்கு இவைகள் எல்லாம் முயற்சிக்கின்றனவா? இது தொடர்பாக தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வாத, பிரதிவாதங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன. முகப்புத்தகங்களில் கூட இந்த வாதங்கள் இருக்கின்றன. நேரடியான சந்திப்புகளிலும் கூட இந்த விடயம் பேசப்படுகின்றது.

இங்கு நாங்கள் முக்கியமாக அவதானிக்க வேண்டியது, எங்களுடைய இளைஞர்களை அவர்கள் திசை திருப்புகின்றார்கள் என்று சொன்னால் நாங்கள் எங்கள் இளைஞர்களுக்கான திசையை காட்டி இருக்கின்றோமா என்பது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் இல்லாத ஒரு சூழல் தொடங்கி 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஏதோ நிரம்ப விடயங்கள் நாங்கள் செய்திருப்பதாக கூறுகின்றோம். ஆனால் உள்ள தேவைகளின் அளவை பார்க்கும் பொழுது அவை போதாதது. யுத்த நெருக்கடி, இடப்பெயர்வு என்று அழுத்தங்களின் கீழாக வாழந்த மக்கள் யுத்தம் முடிந்து வெளியில் வரும் போது, இந்த வெளி உலகத்திற்கு கால் எடுத்து வைக்கும் போது சுதந்திர காற்றை சுவாசிப்பது போன்று உணர்கின்றார்கள். இயல்பாகவே இளையோர்கள் மத்தியில் இந்த உணர்ச்சி அதிகமாக இருக்கும். இது அரசியல் சுதந்திரம் அல்ல, அவர்களுடைய மகிழ்ச்சிக்கான சுதந்திரம். அவ்வாறு வரும் போது அவர்கள் அதை ஒரு கட்டற்ற சுதந்திரமாக நினைக்கிறார்கள். இந்த நிலைமையை கையாள்வதற்கு நாங்கள் தவறும் போது, அந்த இடைவெளியை, அந்த வெற்றிடத்தை வேறு தொகுதியினர் கையாள முற்படுகின்றார்கள். இதுதான் மிகவும் ஆபத்தானது.

ஆனால் நாங்கள் ஒரு வாதத்தை முன் வைக்கின்றோம். 'நாங்கள் ஒரு தேசிய விடுதலை போராட்டத்தை நடத்தியவர்கள், இழப்புக்களை சந்தித்தவர்கள், அதிலிருந்து இன்னும் மீண்டெழ வில்லை. எனவே இளைஞர்கள் அந்த தேசிய பாதையிலிருந்து விலகக் கூடாது. எனவே இந்த மகிழ்வுகள் களியாட்டங்கள் எல்லாம் தேவை யில்லை' என்று கூறுகின்றார்கள். இதை ஒரு தவறான வாதமாகவே நான் கருதுகின்றேன். ஒரு விடயத்தை செய்வதற்காக இழந்து போன விடயங்களையே தொடர்ந்து சோகம் கொண்டாடிக் கொண்டிருப்பது என்பது எங்கள் மரபில் இல்லை. வீட்டில் கூட ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவர் மரணித்தாலோ துன்பப்பட் டாலோ கூட அது ஒரு வருடத்திற்கு தான் இருக்கும். பின்பு எல்லாமே இயல்பிற்கு வந்து விடும். அதுதான் வாழ்க்கை.

யுத்தத்திற்கு பின்னரான 15 வருடம் என் பது மிகப்பெரிய காலம். அதுவும் இளைஞர் களுடைய வாழ்க்கையில் அது மிகப்பெரிய காலம். எனவே அவர்கள் யாருக்காக தங்க ளுடைய மகிழ்வை தவறவிட வேண்டும் என் கின்ற கேள்வி எங்களிடம் இருக்கின்றது. நாங் கள் இன்னமும் தெளிவான ஒரு நிகழ்ச்சி நிரலில் தேசிய விடுதலைக்கானதாகவோ, அல்லது எங் களுடைய அரசியல் அதிகாரத்திற்கானதா கவோ, ஒரு பாதையை கட்டியமைக்காமல் இருக்கும் போது அந்த இளைஞர்களுக்கு யார் உத்தரவாதம் கொடுப்பது? இன்னும் சில வரு டங்களுக்கு காத்திருங்கள் உங்களுடைய வாழ் க்கை எல்லாம் பிரகாசிக்கும் என்று உத்தரவா தம் கொடுக்க முடியுமா? உத்தரவாதம் கொடு க்க முடியாது.

அதேவேளையில் சம காலத்தில் இலங்கை யிலும் உலகளாவிய பொருளாதாரத்தினதும் தொழில்நுட்பத்தினதும் வளர்ச்சி காரணமாக பல் வேறு மாற்றங்கள் நிகழ்ந்து இருக்கின்றன. இந்த தொழில்நுட்பத்தின் பிரமாண்டமான வளர் ச்சி காரணமாக குறிப்பாக தகவல் தொழில் நுட்பத்தின் பிரமாண்ட வளர்ச்சி காரணமா கவும் அது தனி மனிதருக்குள்ளும், குடும்பத் திற்குள்ளும், சமூகத்திற்குள்ளும் ஊடுருவியுள்ள தாக்கம் காரணமாகவும் இளையோரின் தேட லின் அளவு வியாபித்துள்ளது. அவர்கள் சாத் தியமோ சாத்தியம் இல்லையோ நிரம்ப கனவு களோடு பயணிக்கின்றார்கள். நிரம்ப ஏக்கங் களோடு பயணிக்கின்றார்கள். நிரம்ப தடு மாற்றங்களோடு பயணிக்கின்றார்கள். இந்த இடத்தில் அவர்களை வழிப்படுத்தி, நெறிப்ப டுத்தி அவர்களை முழுமையான ஆள்களாக மாற்றுவதற்கான வாய்ப்புக்களை நாங்கள் எந் தளவிற்கு உருவாக்கி கொடுத்து இருக்கின் றோம் என்கின்ற ஒரு கேள்வி எங்கள் முன் பாரியதாக விரிந்து நிற்கின்றது.

நாங்கள் இளையோரை முடங்கி இருங்கள் என்று கூற முடியாது. துக்கம் கொண்டாடுங்கள் என்று கூற முடியாது. அடங்கி இருங்கள் என்று கூற முடியாது. அவர்களுடைய ஆற்றல்கள் வெளிப்படுவதற்கான வழிகளை நாங்கள் திற ந்து விட வேண்டும். இல்லாவிட்டால் அது வெடிக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண் டும். **புலம்பெயர் மக்களுடைய ஆதரவுகள் குடும் பங்களுக்கு கிடைத்ததனால் எங்களுடைய நுகர்வு கலாசாரம் கட்டற்ற முறையில் வீங்கிப் பருத்த போது, எங்களுடைய நுகர்வு பண்பாடு கட்டு மீறியதாக மாறிய போது, அது கூட நிரம்ப இளையோரை பாதித்தது. இளையோர் கள் தாம் வறுமை உள்ளவர்கள் என்று நினைப்பதை விட சார்பு ரீதியான வறுமை உள்ளவர்களாக தான் தங்களை எண்ணிக் கொண்டார்கள். மற்றவர்களோடு ஒப்பிடும் போது தங்களிடம் ஒரு குறிப்பிட்ட விடயம் இல்லையே, மற்றவர்களோடு ஒப்பிடும் போது தங்களிடம் அந்த கொள்வனவு சக்தி இல் லையே என்று ஒப்பிட்டு பார்த்து தங்களை இழிந்தவர்களாக அல்லது குறைந்தவர்களாக நினைக்கிறார்கள். அவர்களுக்கு தாங்களும் அந்த நிலைக்கு வர வேண்டும் எனும் யோசனை வரும் பொழுது ஏதோ ஒரு குறுக்குவழி தேடல் அல்லது முயற்சிக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது தவறுகள் நிரம்ப நிகழ்கின்றன.**

இதேவேளையில் யுத்தத்திற்கு பின்னால் போதைப்பொருள் விடயம் ஒரு பாரிய விட யமாக இருக்கின்றது. மதுபானங்கள் கூட முன் பிருந்ததை விட தாராளமாக கிடைக்கின்றன. மதுபான கடைகளினுடைய ஆதிக்கங்களும், இளையோரின் வேலை, நேரம் போன்ற பல விடயங்கள் மதுபான கலாசாரத்தை மிகவும் ஊக்குவிக்கின்றது. நாங்கள் இளையோர்களாக இருந்த காலகட்டத்தில் ஒரு நிலையான

> எங்களிடமிருந்த பொதுவெளிகள் எதுவுமே இல்லை. சமூக நிறுவனங்களான வாசிகசாலை, சனசமூக நிலையம், கிராம அபிவிருத்தி சங்கம் எல்லாமே காணாமல் போய்விட்டன.

சமூகத்திற்குள் வாழ்ந்து கொண்டிருந்தோம். அந்த சமூகம் எங்களை பாதுகாத்தது. அந்த சமூகம் எங்களுக்கான வாய்ப்புகளை சமூகத் திற்குள்ளேயே உருவாக்கி தந்தது.

அன்று எங்களுக்கு வாசிகசாலைகள் இருந்தன. உள்ளூருக்குள்ளேயே மைதானங்கள் இருந்தன. கோவில் முற்றம் இருந்தது. வேறும் பல விடயங்கள் இருந்தன. எனவே நாங்கள் அதற்குள் தான் நிற்போம். எனவே எங்களுடைய பெற்றோருக்கும் நாங்கள் எங்கு நிற்கின்றோம் என்பது தெரிந்திருந்தது. அந்த மைதானங்கள், வாசிகசாலைகள், கோவில் முற்றங்கள் எல்லா இடங்களிலும் யாரோ முதியவர்கள், அந்த ஊரை சேர்ந்த பெரியவர்கள் இருப்பார்கள். எனவே அவர்கள் சமூகத்தை பொறுப்புடன் கண்காணித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களது ஒரு குரலுக்கு நாங்கள் அடங்கி போவோம். எங்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் அறிவார்கள். நாங்களும் அந்த மூத்தோர்களை அறிந்திருந்தோம். எனவே எங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

இடம்பெயர்ந்த வாழ்வின் போதும் மீளக் குடியமர்வின் போதும் இந்த கட்டுக்கோப்பு சிதைக்கப்பட்டது. சிதைந்து போனது. ஒரு தலைமுறை இடைவெளிக்கு பிறகு நாங்கள் திரும்பி வரும் போது அயலானையும் வீட்டுக் காரனையும் உறவினரையும் கூட அடையாளம் தெரியாதவர்களாக தான் இருந்து வருகிறோம். எங்களிடமிருந்த பொதுவெளிகள் எதுவுமே இல்லை. சமூக நிறுவனங்களான வாசிகசாலை, சனசமூக நிலையம், கிராம அபிவிருத்தி சங்கம் எல்லாமே காணாமல் போய்விட்டன. முன்னைய காலங்களில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் என்பவர் சமூகத்தின் மிகவும் உயர்ந்த மதிக்கத்தக்க மனிதராக கருதப் படுவார். அவருடைய சொல் வெல்லும் சொல் லாக இருக்கும். எல்லோரும் ஏற்றுக் கொள்வார் கள். இப்பொழுது அப்படியான கிராம அபி விருத்தி சங்கங்களை காண்பது மிக மிக அரிதாகி விட்டது. ஏதோ திணைக்களத்தின் தேவைக்காக கிராம அபிவிருத்தி சங்கத்தை நடத்துவது போன்ற விடயம் தான் இங்கு நட ந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று அன்றைய காலக்கட்டங்க ளில் கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம் (YMCA) இளைஞர்களுக்கான மையமாக இருந்தது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற இட ங்களில் அந்த YMCA என்பது ஒரு பலமான வளமான நிறுவனமாக இருந்தது. அங்கு உள்ளக விளையாட்டு வசதிகள் இருந்தன. சிறிய நூலகம் இருந்தது. தொடர்ச்சியான கல ந்துரையாடல்கள் இருந்தன. சிறிய திரைப்பட ங்கள், ஆவணப்படங்கள் என்பவற்றை காட்சிப் படுத்துகின்ற விடயங்கள் இருந்தன. தொடர்ச் சியாக இளைஞர்கள் அந்த YMCA ஐ சுற்றி நின்று கொண்டே இருப்பார்கள். யாழ்ப்பா ணத்தில் குறிப்பாக கச்சேரிக்கு எதிர் பக்கம் இருந்த YMCA அப்படியான ஒரு நிகழ்வு மைய மாக தான் இருந்தது. அதேபோன்று இந்து இளைஞர்கள் பேரவை (YMHA) உம் இருந்தது. அதுவும் கூட குறிப்பாக திருநெல்வேலியில் இருந்த YMHA அப்படியான ஒரு செயற்பாட்டு மையமாக இருந்தது. அங்கு ஒரு நூலகம் இருந் தது. அங்கு பல்வேறு விதமான பயிற்சிகள் நடந்தன. எப்போதும் அந்த திருநெல்வேலி YMHA ஒரு இயங்குநிலையில் இருக்கும். எந் நேரமும் இளைஞர்கள் சுற்றி சுற்றி வந்து கொண்டே இருப்பார்கள். ஆனால் இப்பொழுது அவற்றின் செயற்பாடு முற்றாக காணப்படாமல் போய்விட்டது. எஞ்சி இருந்த ஒன்றிரண்டும் இன் றைக்கு செயலிழந்தோ வலுவிலந்தோ காணப் படுகின்றன. எனவே இளைஞர்கள் எங்கு போவது? எங்கிருந்து தாங்கள் உரையாடுவது? சிறிய சிறிய உள்ளக விளையாட்டுக்களை எங் கிருந்து செய்வது? வாய்ப்பே இல்லையே. நாங் கள் வாய்ப்புக்களை உருவாக்கி கொடுக்கவில் லையே.

முன்பு கத்தோலிக்க திருச்சபையின் கீழ் இளைஞர்களை வழிநடத்தி வளப்படுத்து வதற்காக சில மையங்கள் இருந்தன. குறிப்பாக இளைஞர் நகரம் என்று சொல்லப்படுகின்ற ஒரு களம் உருவாக்கப்பட்டது. அது சில வேளைகளில் நான்கு பரப்பு காணியிலும்

இருக்கலாம், சிலவேளைகளில் வசதியான நான்கு ஏக்கர் காணியிலும் இருக்கலாம். குறிப்பாக எனக்கு தெரிந்தவரையில் இராகமவில் மிகப் பெரியதாக ஒன்று இருந்தது. இளைஞர்களுடைய ஆற்றல்களை ஊக்குப்படுத்துவதற்கும் வழிப்படுத்துவதற்கும் அவர்களை உளவளப்படுத்துவதற்குமாக அந்த மையங்கள் செயற்பட்டன. எப்பொழுதும் அங்கு மூத்தோர்களும் ஆசிரியர்களும் இருப்பார்கள். இளைஞர்களை தங்கள் பாட்டில் போக விடுவார்கள் ஆனால் அவர்கள் கண்காணித்து கொண்டே இருப்பார்கள். வழிப்படுத்துவார்கள். இப்பொழுது அப்படி எல்லாம் இல்லாமலே போய்விட்டது.

இன்று, பாடசாலைகள் பழைய மாணவர்களின் உதவிகளை கேட்டு கேட்டு எடுத்து கட்டடங்களால் வளர்கின்றன. வாசலில் வளைவு வைக்கிறார்கள். சுவர்களை கட்டுகிறார்கள். ஆனால் அந்த பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்களை அந்த பாடசாலைக்குள் வந்து அமர்ந்து கலந்துரையாடல் செய்வதற்கு எந்தளவுக்கு அவை அனுமதிக்கின்றன என்றொரு கேள்வி இருக்கின்றது. யாழ்ப்பாண இந்து கல்லூரியை பொறுத்தவரை இது பாரம்பரியமாக அங்குள்ள ஒரு பழக்கம். பழைய மாணவர்கள் வந்து அங்கு விளையாட்டு மைதானத்தை சுற்றியும் வீதியோரத்தில் இருந்தும் நிரம்ப செயற்பாடுகள் செய்வார்கள். பாடசாலைக்குள்ளும் அவர்கள் வந்து கதைப்பார்கள். விவாதங்கள் நடத்துவார்கள். பல விடயங்கள் செய்வார்கள். சென். ஜோன்ஸ் கல்லூரியில் கூட அப்படியான விடயம் இருந்திருக்கின்றது. யாழ். மத்திய கல்லூரியில் அப்படியொரு விடயம் இருந்திருக்கின்றது. சிலவேளைகளில் அப்படியான வசதிகள் மகாஜனா, யூனியன் போன்ற சில பாடசாலைகளில் இருந்தாலும் கூட அவை முழுமையானதாக இல்லை.

எனவே பாடசாலையை விட்டு வெளியே வந்த மாணவன் தனது அடுத்த நாள் பொழுது போக்குக்கு எங்கே போவது என்று ஒரு கேள்வி இருக்கிறது. எங்களிடம் என்ன நிகழ்ச்சித் திட்டம் இருக்கிறது? நாங்கள் என்ன வசதியை எங்களுடைய பிள்ளைகளுக்கு உருவாக்கி கொடுத்திருக்கின்றோம்? நாங்கள் எங்கள் கடமைகளை தவற விட்டிருக்கின்றோம். ஆலயங்களும், கோபுரங்களும், பாடசாலைகளுக்கு வாசல் தோரணங்களும், சுற்று மதில் சுவர்களும் கட்டுகின்றோம். ஆனால் எங்களுடைய இளைஞர்களுக்கான மையங்களை அவர்களுக்கான வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக அவர்களுடைய உளவள வலிமையை மேம்படுத்துவதற்காக அவர்களுடைய ஆற்றல்களை கண்டறிந்து அவற்றை கூர்மைப்படுத்தி அவர்களை உலகத்தின் முதன்மை குடிமக்களாக நிலைநிறுத்துவதற்காக நாங்கள் என்ன செய்திருக்கின்றோம்? எங்களிடம் அப்படி எதுவுமே இல்லை.

இவ்வாறு நாங்கள் எங்களுடைய கடமைகளை செய்யாமல் எங்களுடைய பிள்ளைகளை அநாதரவாக விட்டுவிட்டு, தவறானவர்கள் வந்து எங்களுடைய பிள்ளைகளை வழிப்படுத்துகின்றார்கள் சிக்கவைக்கின்றார்கள் சீரழிக்கின்றார்கள் என்று கூறுவது எந்தளவிற்கு பொருத்தமானது? நாங்கள் அவர்களிடமிருந்து எங்களுடைய பிள்ளைகளை காப்பாற்ற வேண்டுமென்றால் எங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான விடயங்களை நாங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளுக்கான உரையாடல்களை தொடங்க வேண்டும். எங்களிடம் பொதுவெளிகள் இல்லை என்று இல்லை. நிரம்ப பொதுவெளிகள் சன சமூக வெளிகள் உண்டு. கோவில் முற்றங்கள் உண்டு. பாடசாலை மைதானங்களும் பாடசாலைகளும் உண்டு.

தெளிந்த நிகழ்ச்சி நிரலும் தெளிந்த திட்டமும் ஒரு தூரப்பார்வையும் எங்களிடம் இல்லாமல் இருக்கின்றோம். எங்களுடைய உள்ளூர் சமூகமும் புலம்பெயர்ந்த சமூகமும் இதில் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டும். இது மிகவும் அவசரமானதாக இருக்கின்றது. நாங்கள் நிகழ்ச்சிகளை எங்களுடைய பிள்ளைகளுக்கு ஏற்றது போல, அவர்களை வளப்படுத்தும் நிகழ்ச்சிகளை, அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். எங்களுடைய வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள் மீள தங்களுடையை முழுமையான ஆற்றல்களுடன் மேலெழ வேண்டும். அந்த வாசிகசாலைகளில் கரம், சதுரங்கம் போன்ற உள்ளக விளையாட்டுகளும் மைதான விளையாட்டுகளும் நூலகம் போன்ற அறிவுத் தேடல் களங்களும் கலை விழாக்களும் என்று ஏதோ ஒருவகையில் இளையோரை கவர்ந்து வைத்திருக்கக் கூடிய விடயங்களை உருவாக்க வேண்டும். இவற்றை தொடர்ச்சியாக நடாத்தி வர வேண்டும்.

# இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு

## (பாகம் –02)






சி.அ யோதிலிங்கம்

**த**மிழ் மக்களை பொறுத்தவரை தமிழ் அரசியல் வரலாற்றை ஒரு மீள் வாசிப்பு செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் இன்றைக்கு எழுந்திருக்கிறது. தமிழ் அரசியல் வரலாறு என்பது பல காலகட்டங்களாக வளர்ந்திருக்கிறது. இலங்கையில் நவீன அரசியல் ஆரம்பிக்கப்பட்டது கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட 1833 ஆம் ஆண்டு. அதிலிருந்து தமிழர் அரசியல் வரலாறும் ஆரம்பித்து விட்டது என கூறலாம். தமிழர் அரசியல் வரலாற்றை நாங்கள் தெளிவாக புரிந்து கொள்வதற்காக அதனை பல காலகட்டங்களாக பிரித்து நோக்குவது நல்லது என நான் நினைக்கிறேன். அதில் முதலாவது காலகட்டம் 1833 தொடக்கம் 1921 வரையான காலகட்டம்.

இக்காலகட்டத்தை பற்றி நாங்கள் ஏற்கனவே எங்களுடைய முதலாம் பகுதியில் கூறி இருந்தோம். இக்காலகட்டத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கென ஒரு இன அரசியலை நகர்த்தி இருக்கவில்லை. அவர்கள் அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தை தான் பேணினார்கள். பண்பாட்டு தளத்தில் தான் தமிழர் என்ற அடையாளத்தை பேணினார்கள். இதனாலே அன்றைக்கு தமிழ் மக்களினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்கவில்லை. முழு இலங்கைக்குமே தலைவர்களாக இருந்தார்கள். அதிலே மூன்று பேர் மிகவும் முக்கியமானவர்கள் ஒன்று சேர். பொன் இராமநாதன், இரண்டாவது சேர். பொன் அருணாச்சலம், மூன்றாவது சேர். முத்துக்குமாரசுவாமி. இந்த மூன்று பேரும் தான் அந்த காலகட்டத்தை நகர்த்திய முக்கிய அரசியல் தலைவர்களாக விளங்கி இருந்தனர்.

அந்த காலகட்டத்தை நகர்த்துவதில் பல அரசியல் நிகழ்வுகள் பங்களித்து இருக்கின் றன. 1833 ஆம் ஆண்டின் கோல்புறூக் யாப் பின் சீர்திருத்தம், 1912 ஆம் ஆண்டின் மக்க லம் சீர்திருத்தம், படித்த இலங்கையர் பிரதி நிதியாக சேர். பொன் இராமநாதன் தெரிவு செய்யப்பட்டமை, 1916 ஆம் ஆண்டு நடை பெற்ற இரண்டாவது தேர்தலிலும் சேர். பொன் இராமநாதன் படித்த இலங்கையர் பிரதிநிதி யாக தெரிவு செய்யப்பட்டமை, 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லீம் கலவரம், 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரசின் தோற்றம் என்பவை முக்கியமான நிகழ்வுகள். இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றம் பெறுகின்ற போது யாழ்ப்பாண தமிழ் தலைவர்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான கலந்துரை யாடலும் எழுத்து மூல உடன்படிக்கையும் ஏற் படுகின்றன. 1921 ஆம் ஆண்டு மனிங் அர சியல் சீர்திருத்தம், அதில் மட்டுப்படுத்தப்பட்ட ளவில் பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப் படுத்தப்பட்டது. தொடர்ந்து 1921 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறி சேர். பொன் அருணாச்சலம் தமிழர் மகாஜன சபையை உருவாக்கினார். இந்த நிகழ்வுகள் தான் உண்மையில் இந்த காலகட்டத்தை நகர் த்தி இருந்தன.

இந்த காலகட்டத்தை நாங்கள் முழுமை யாக புரிந்து கொள்வோமாயின் இந்த நிகழ்வு கள் ஏற்படுத்திய அரசியல் பாதிப்புகளையும் நாங்கள் விளங்கி கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன். 1921 ஆம் ஆண்டு சேர். பொன் அருணாச்சலம் தமிழர் மகாஜன சபையை உரு வாக்கியதனை தொடர்ந்து இந்த அரசியலினு டைய இரண்டாவது காலகட்டம் ஆரம்பமாகிறது. இந்த காலகட்டத்தை அருணாச்சலம் உருவாக் கியிருந்தாலும் அவரால் இந்த காலகட்டத்தை நகர்த்த முடிந்திருக்கவில்லை என்பது தான் உண்மை. 1924 ஆம் ஆண்டு அருணாச்சலம் அவர்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோவி லுக்கு தரிசனத்திற்காக சென்ற போது அங்கே மாரடைப்பினால் மரணமானார். அதனால் அவ ரால் இந்த காலகட்டத்தை பெரியளவில் நகர் த்தி இருக்க முடியவில்லை.

இந்த காலகட்டத்தை நகர்த்தியவர் உண்மையில் ஜி. ஜி. பொன்னம்பலம் தான். இவர் 1927 ஆம் ஆண்டு தன்னுடைய இலண்டன் படிப்பை முடித்துக் கொண்டு இலங்கைக்கு வருகை தந்தார். இலங்கைக்கு இவர் வந்த போது தான் டொனமூர் குழுவினரும் இலங்கை க்கு வருகின்றனர். அவர்கள் முன்னிலையில் ஜி. ஜி. பொன்னம்பலமும் சாட்சியம் அளிக் கக் கூடிய நிலைமை இருந்தது. இந்த கால கட்டத்தில் உண்மையில் ஜி. ஜி. பொன்னம் பலம் நகர்த்திய அரசியல் என்பது இலங்கை என்கின்ற அந்த ஒற்றை ஆட்சி கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு அதற்குள் சம வாய்ப்புகளை கோருகின்ற அரசியலை தான் அவர் நகர்த்தி யிருந்தார். அவருடைய 50 க்கு 50 கோரிக்கை இந்த அடிப்படையில் தான் எழுச்சி அடைந்தது.

இதே காலப்பகுதியில் தமிழ் அரசி யலை பொறுத்தவரையில் இரண்டு பெரிய அமைப்புகளும் இரண்டு பெரிய அரசியலும் வளர்ந்து வந்ததை நாங்கள் காணலாம். 1924 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் தோற்றம் பெறுகிறது. இதனுடைய முக்கிய மான கொள்கையாக இருந்தது இலங்கைக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்பது தான். அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸினுடைய செயற்பாடுகளால் கவரப்பட்டவர்களாக இருந் தார்கள். இந்திய தேசிய காங்கிரஸினுடைய தலைவர்களை அழைத்து அவர்கள் பல கூட்ட ங்களையும் நடத்தினார்கள். ஆகவே ஒரு பக்க த்தில் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் நகர்த்திய இலங்கை தேசிய அரசியல் என்பது ஒன்று, இன்னொரு பக்கத்தில் அருணாச்சலத்தினால் தொடக்கப்பட்டு ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் இன அரசியல் என் பது ஒன்று. யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் தான் யாழ்ப்பாணத்தில் பலமான அமைப்பாக இருந்தது.

1931 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் யாப்பு இலங்கைக்கு முழு மையான சுதந்திரத்தை தரவில்லை என அவர் கள் கூறி டொனமூர் யாப்பின் கீழ் இடம்பெற்ற பொதுத் தேர்தலை அவர்கள் பகிஸ்கரித்தார் கள். இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்த நான்கு தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் நட

**நிர்வாக குழுக்களில் பெரும்பான்மை சமூகம் அல்லாத ஏனைய சமூகத்தை சேர்ந்தவர்கள் மிகவும் சிறியளவில் இருந்தார்கள். அதனால் குழுக்களின் தீர்மானங்களில் பாதிப்பு செலுத்தக் கூடிய நிலை அவர்களுக்கு இருக்கவில்லை. குழுக்களில் பெரும்பான்மையோர் ஆதரவு கொடுத்தால் தான் ஒரு தமிழரோ, முஸ்லிமோ அல்லது மலையகத்தவரோ அமைச்சராக வர முடியும்.**

க்கவில்லை. ஜி. ஜி. பொன்னம்பலம் தேர்தலில் போட்டியிட விரும்பினார். யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாத போது அவர் மன்னார், முல்லைத்தீவு தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இதன் பிறகு 1934 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடைத் தேர்தல் நடக்கிறது. அதில் பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு ஜி. ஜி. பொன்னம்பலம் டொனமூரினுடைய அரசாங்க சபைக்கு ஒரு பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். டொனமூர் அரசியல் யாப்பை பொறுத்தவரை அது இலங்கைக்கு ஒரு வகையான அரைப் பொறுப்பாட்சியை முதன்முதலில் வழங்கியது. கோல்புறூக் காலத்தில் இருந்து டொனமூர் காலம் வரை இனப் பிரச்சனையை அல்லது இங்கு இருக்கின்ற இன முரண்பாட்டை தீர்ப்பதற்கு தீர்வாக அவர்கள் அந்த இனவாரி பிரதிநிதித்துவ முறையை தான் அறிமுகம் செய்தார்கள். அது ஒருவகையில் சமநிலை பிரதிநிதித்துவ முறை.

1921 ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து இந்த பிரதிநிதித்துவ சமநிலை குழம்புகிறது. ஆனாலும் ஆட்சி அதிகாரம் பிரித்தானியரின் கைகளில் இருந்தது. அதனால் தமிழர்களையோ ஏனைய இனங்களையோ அது பெரியளவில் பாதிக்கவில்லை. 1931 ஆம் ஆண்டு அரைப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது.

அந்த அரைப் பொறுப்பாட்சியும் பெரும்பான்மை தேர்தல் முறையின் அடிப்படையில் ஏற்கனவே கோல்புறூக் காலத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட அந்த ஒற்றையாட்சி நிர்வாக கட்டமைப்புக்கு தான் வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட போது தமிழ் மக்கள் ஆட்சி அதிகார கட்டமைப்பில் இருந்து தூக்கி வீசப்படுகின்ற நிலை ஒன்று தான் காணப்பட்டது. இந்த நிலை காரணமாக ஒரு எதிர்ப்பு அரசியல் வர தொடங்கியது. ஜி. ஜி. பொன்னம்பலம் அந்த எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்தவர்களில் முக்கியமானவராக விளங்கியிருந்தார். இவரால் முன்வைக்கப்பட்டது தான் "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்கின்ற அந்த கோஷம்.

1931 இற்கு பிறகு இந்த இன முரண்பாட்டை தீர்ப்பதற்காக இவர்களிடம் பொறுப்பாட்சி வழங்கிய நிலையில் இனங்களை பாதுகாக்கின்ற ஏற்பாடுகளை கொண்டு வருதல் என்பது தான் அரசாங்கத்தினுடைய ஒரு முயற்சியாக இருந்தது. டொனமூர் அரசியல் யாப்பில் மூன்று விடயங்கள் இன முரண்பாட்டை இல்லாமல் செய்யும் என்று எதிர்பார்த்தார்கள். ஒன்று நிர்வாக குழுமுறை, இரண்டாவது தேசாதிபதிக்கு வழங்கப்பட்ட ஒதுக்கு அதிகாரங்கள், மூன்றாவது பொது சேவை ஆணைக்குழு. ஆகவே நிர்வாக குழு முறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் நிர்வாக குழுக்களாக பிரிக்கப்படுவதனால் அந்த நிர்வாகத்தில் பங்கு பெறக் கூடிய வாய்ப்பு எல்லா இனங்களுக்கும் இருக்கும். ஆகவே அவர்களுடைய நலன்களை அது பாதுகாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிர்வாக குழுக்களில் பெரும்பான்மை சமூகம் அல்லாத ஏனைய சமூகத்தை சேர்ந்தவர்கள் மிகவும் சிறியளவில் இருந்தார்கள். அதனால் குழுக்களின் தீர்மானங்களில் பாதிப்பு செலுத்தக் கூடிய நிலை அவர்களுக்கு இருக்கவில்லை. அதேவேளை குழுக்கள் தான் அதனுடைய தலைவரை தெரிவு செய்யும். அவர் தான் அந்த துறையினுடைய மந்திரி என்று சொல்லி அழைக்கப்பட்டார். ஆகவே இந்த குழுக்களில் பெரும்பான்மையோர் ஆதரவு கொடுத்தால் தான் ஒரு தமிழரோ, முஸ்லிமோ அல்லது மலைய

கத்தவரோ அமைச்சராக வர முடியும். 1931 ஆம் ஆண்டு தேர்தலுக்கு பிறகு பெரும்பான்மை சமூகம் அனுசரித்ததால் இரண்டு பேர் ஏனைய இனங்களில் இருந்து அமைச்சர்களாக வந்தார் கள். தொழில் அமைச்சராக மலையக வம்சாவ ளியை சேர்ந்த பெரி. சுந்தரம் வந்தார். போக்கு வரத்து அமைச்சராக மார்க்கான் மார்க்கர் வந்தார்.

1936 ஆம் ஆண்டு மந்திரி சபை அமைக் கப்பட்ட போது அது தனி சிங்கள மந்திரி சபையாக இருந்தது. ஏனைய இனங்கள் மந் திரிகளாக வருவதற்கு பெரும்பான்மை சமூ கம் அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் தான் ஜி. ஜி. பொன்னம்பலம் 50 க்கு 50 கோரிக்கையை முன்வைக்கிறார். இதன் உண் மையான அர்த்தம் 50% பெரும்பான்மை இனத் திற்கு கொடுக்க வேண்டும். மீதி 50% ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். பிரதிநிதித்துவம் என்று வரும் போதும் வேலைவாய்ப்பு என்று வரும் போதும் எல்லாவற்றிலும் 50% பேணப்பட வேண்டும் என்பது தான் அவருடைய கருத்தாக இருந் தது. இந்த 50 க்கு 50 என்கிற இயக்கம் நீண்ட காலமாக செயற்பட்ட அமைப்பாக இருந்தது.

இதே காலப்பகுதியில் ஏனைய இனங் களுக்கு எதிரான சட்டங்கள் எல்லாம் உரு வாக்கப்படுகின்றன. குறிப்பாக மலையக வம் சாவளியினருக்கு எதிராக மூன்று சட்டங் கள் வருகின்றன. ஒன்று நெற்காணி சட்டம், இரண்டாவது போக்குவரத்து சட்டம், மற்றது மீன்பிடி சட்டம். இந்த மூன்றிலும் அனு மதிப்பத்திரம் எடுப்பது என்றால் அது இலங் கையர்களுக்கு மட்டும் தான் என்று சொல்லப் பட்டது. இலங்கையர் அல்லாதவர்களுக்கு அனு மதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. ஆகவே இது இந்திய வம்சாவளியினரிடமிருந்து அந்த தொழில் வாய்ப்புகளை இருந்து பறித்த ஒரு நிலைமை தான் காணப்பட்டது.

அதேவேளை 1937 ஆம் ஆண்டு உள் ளூராட்சி சபை சட்டத்தை கொண்டு வந்து பெருந்தோட்ட துறையை அதிலிருந்து தவிர்த் திருந்தார்கள். இலங்கை தமிழர்களுக்கு நேரடி யாக ஒடுக்குமுறை வராமல் விட்டாலும் ஏனைய தமிழர்களுக்கு அது வருகின்ற ஒரு நிலைமை தான் உண்மையில் உருவாகியது. இந்த நிலையில் தான் 1944 ஆம் ஆண்டு சோல்பரி குழுவினர் இலங்கைக்கு வருகிறார்கள். ஆகவே சோல்பரி குழுவினருக்கு முன்னிலையில் சாட்சி யம் அளிக்க வேண்டுமென்பதற்காக அவசர அவசரமாக 1944 ஆம் ஆண்டு தமிழருக்கு ஒரு கட்சி தேவை என்ற அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்தில் வைத்து ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் உருவாக்கப் பட்டது. தமிழ் காங்கிரஸ் கட்சி சோல்பரி விசாரணை குழுவினர் முன்னிலையில் 50 க்கு 50 கோரிக்கையை தான் முன்வைத்தது. சோல்பரி விசாரணை குழுவினர் தமிழ் மக்க ளுக்கு கவலைகள், அதிருப்திகள் இருக்கின்றன என்பதனை ஏற்றுக் கொண்டாலும் கூட அவர் கள் 50 க்கு 50 கோரிக்கையை ஏற்றுக் கொள் ளவில்லை. அதை நிராகரித்தார்கள்.

அதேவேளை டொனமூர் அரசியல் யாப்பில் நிர்வாக குழுமுறையை விட தேசாதிபதிக்கு வழங்கப்பட்ட ஒதுக்கு அதிகாரங்களும் ஏனைய இனங்களை பாதுகாக்கும் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஏனென்றால் தேசாதிபதி அன் றாட கருமங்களில் இருந்து நீக்கப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கின்ற நிலையில் இருந்தார். ஆனால் அவருக்கு ஒதுக்கு அதிகாரம் இருந்தா லும் அவர் அவற்றை பிரயோகிக்கவில்லை. அவர் பெரும்பான்மை சமூகத்தோடு ஓரளவுக்கு இணங்கி போகின்ற அரசியலை தான் அங்கு முன்னெடுத்தார். இதனால் மலையக வம்சாவளி யினருக்கு எதிராக மூன்று சட்டங்கள் கொண்டு வரப்பட்ட போது அவரும் அதற்கு சம்மதம் அளித்த நிலைமை தான் காணப்பட்டது. ஆகவே அந்த ஒதுக்கு அதிகாரங்கள் என் பது பயன்பெறவில்லை. மற்றது பொது சேவை ஆணைக்குழு இருந்தது. அரச உத்தியோ கத்தர்கள் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக அந்த பொது சேவை ஆணைக்குழு இருந்தது. இது அரச உத்தியோகங்களில் பாரபட்சம் வருவதை தடு க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஒப்பீட்டு ரீதி யில் அது கொஞ்சம் பயனளித்தது என்று நாங் கள் கூறலாம்.

இந்த நிலையில் தான் சோல்பரி குழுவி

னர் வருகிறார்கள். அவர்கள் தமிழ் மக்களுக்கு கவலை, அதிருப்தி இருக்கிறது என்பதனை ஏற்றுக்கொண்டு சிறுபான்மையினோர் பாதுகாப்பு பொதி என்று ஒரு பொதியை அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அதில் தான் சோல்பரி யாப்பினுடைய 29 வது பிரிவு வருகிறது. செனட் சபை வருகிறது. நியமன உறுப்பினர்கள் வருகிறார்கள். பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி வருகிறது. கோமறை கழகம் வருகிறது, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வருகிறது. நீதி சேவை, பொது சேவை ஆணைக்குழுக்கள் வருகின்றன. அனுபவ ரீதியில் இது எதுவுமே தமிழ் மக்களுக்கு பாதுகாப்பாக அமையவில்லை.

ஆகவே இந்த இடத்தில் தான் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு தொடர்பான செயற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது அது தமிழ் மக்களினுடைய நலன்களை பாதுகாக்காது என்று சொல்லி ஜி. ஜி. பொன்னம்பலம் கருதினார். இங்குள்ள அரசியல் தலைவர்களை நீங்கள் இதனை எதிர்த்து கொண்டு நில்லுங்கள் நான் பிரித்தானியாவிற்கு சென்று அங்குள்ள தலைவர்களோடு பேசி இந்த தமிழ் மக்களினுடைய நலன்கள் பாதிக்கப்படுவதை நிறுத்துவேன் என்று அங்கே போனார். அவர் அங்கு பிரித்தானிய தலைவர்களோடு பேசிக் கொண்டு இருந்த போது D. S சேனநாயக்கா இங்கே இருந்த தமிழ் தலைவர்களை எல்லாம் கதைத்து பேசி அவர்களை எல்லாம் ஆதரவானவர்கள் ஆக்கி சோல்பரி யாப்பிற்கு ஆதரவாக வாக்களிக்க செய்தார்.

ஜி. ஜி. பொன்னம்பலம் திரும்பி வந்த போது இங்கே இருந்த தமிழ் தலைவர்கள் சோல்பரி யாப்புக்கு ஆதரவாக வாக்களித்திருந்த நிலைமை தான் காணப்பட்டது. அந்த நேரத்தில் தான் ஜி. ஜி. பொன்னம்பலம் யாப்புக்கு ஆதரவாக வாக்களித்த அவ்வளவு பேரையும் நான் இனிமேல் பதவிக்கு வர விடமாட்டேன் என்று சொல்லி சபதம் செய்து 1947 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடுகிறார். அவர் உண்மையில் பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் போட்டியிட இருந்தார். அருணாச்சலம் மகாதேவா தான் சோல்பரி யாப்பை ஆதரித்தவர்களுள் முக்கியமான ஆளாக இருந்தவர். அருணாச்சலம் மகாதேவாவை தோற்கடிக்க வேண்டுமென்பதற்காகவே அவர் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். போட்டியிட்டு அன்றைக்கு சோல்பரி யாப்பிற்கு ஆதரவளித்த எல்லோரையும் தோற்கச் செய்தார். இதில் தான் ஒன்று விளங்குகிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக செயற்படுபவர்களை தமிழ் மக்கள் ஏற்கவில்லை. இதனை அன்றே பார்க்க கூடியதாக இருந்தது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை என்பதற்காக அதனையும் இவர் எதிர்த்தார். ஆனால் D. S சேனநாயக்கா தமிழர்கள் கொஞ்ச பேரை மந்திரிகளாக்கி இவருடைய முயற்சியை முறியடித்தார். ஆகவே இந்த நிலையில் தான் 1948 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்கத்துடன் சேர்கின்ற முடிவை எடுத்தார். கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகவும் பொறுப்பை ஏற்றார்.

அப்பொழுது இலங்கை பிரஜாவுரிமை சட்டம் 1948 ஆம் ஆண்டு வருகிறது. பிறகு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டம் 1949 ஆம் ஆண்டு வருகிறது. ஜி. ஜி. பொன்னம்பலம் அந்த பிரஜாவுரிமை சட்டங்களை ஆதரித்த நிலைமை தான் காணப்பட்டது. இந்த நிலையில் தான் செல்வநாயகம் தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி 1949 ஆம் ஆண்டு தமிழரசு கட்சியை உருவாக்கினார். தமிழரசு கட்சியின் உருவாக்கத்தோடு தமிழ் அரசியலினுடைய மூன்றாவது காலகட்டம் வந்துவிட்டது என்று சொல்லலாம். அதற்கு பிறகு தமிழ் அரசியல் இன்னொரு காலகட்டத்திற்கு நகர்கின்ற நிலைமையை நாங்கள் பார்க்கிறோம். எங்களுடைய மூன்றாம் பகுதியாக நாங்கள் அந்த விடயத்தை விரிவாக பார்ப்போம்.

# இமாலய பிரகடனம்–
## அடிப்படைகளே பிழையானது



சிவா

உலகத் தமிழர் பேரவையும் சிறப்பான சிறிலங்காவுக்கான பௌத்த சங்கமும் 2023 ஆம் ஆண்டு நேபாள நாட்டில் நாகர்கோட் என்ற இடத்திலிருந்து சித்திரை மாதம் 27 ஆம் திகதியிட்ட ஒரு பிரகடனத்தை தயாரித்தார்கள். அதற்கு இமாலய பிரகடனம் என்று பெயரிட்டார்கள். ஆறு மாதங்களுக்கு மேலாக மிகவும் இரகசியமாக இந்த பிரகடனத்தை பாதுகாத்து வந்து மார்கழி மாதம் 7 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இருக்கும் முக்கியமான அரசியல்வாதிகளிடம் அதனை கையளித்துள்ளார்கள். இந்த பிரகடனம் எழுதப்பட்ட உடனேயே ஏன் வெளியிடப்படவில்லை, ஆறு மாதங்களின் பின்னர் வெளியிடப்பட வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்விகள் எழும்பி உள்ளன. தமக்கு அரசியலில் தலையிடும் எண்ணம் இல்லை என்றும் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு ஒரு உரையாடல் வெளியை உருவாக்குவதே தமது நோக்கம் என்று இந்த பிரகடனத்தை வெளியிட்ட இரு தரப்பினரும் தெரிவித்துள்ளார்களா. அது உண்மை என்று எடுத்துக் கொண்டால், இந்த பேச்சுவார்த்தை, இமாலய பிரகடனம் என்பவற்றின் அடிப்படைகளே பிழை என்பதை சுட்டிக் காட்டுவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

பொதுவாக ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர் அதில் கலந்து கொள்பவர்கள் சில முன்னிபந்தனைகளை வைப்பார்கள். அந்த முன்னிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். இந்த பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுத்தது மேற்குலகம் என்றால் அந்த மேற்குலகத்திற்கு இதனூடாக ஏதோ ஒரு நன்மை இருக்கின்றது

**அதிகாரப் பரவலாக்கல் பல முறை முயற்சி செய்யப்பட்டு தோல்வியுற்ற ஒரு கருத்தியல் என்பதை இந்நாட்டின் இனப்பிரச்சனையை படித்தவர்கள் எல்லோரும் அறிவார்கள். இந்நாட்டில் ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இல்லாமல் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுவது சாத்தியமல்ல என்பதையும் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள்.**

என்பது விளங்கிக் கொள்ளக்கூடிய ஒன்று. அந்தவகையில், அந்த நன்மை மேற்குலகத் துக்கு கிடைக்க வேண்டுமானால் இந்த பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவர்கள் மேற்குலகத்தி ற்கு நிபந்தனைகளை விதித்திருக்க வேண்டும். மேற்குலகம் அவற்றை நிறைவேற்றும் வரை பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக் கக் கூடாது.

மேற்குலகத்தின் அழுத்தம் இல்லையென் றால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இரு தரப்பின ரும் பரஸ்பரம் தமக்கிடையே நிபந்தனைகளை முன்வைத்திருக்க வேண்டும். இங்கு இவை எது வுமே நடந்ததாக தெரியவில்லை. அப்படி நடந் திருந்தாலும் அது மக்களுக்கு தெரியப்படுத்தப் படவில்லை. இது இந்த பேச்சுவார்த்தைகளின் ஆரம்பமே அடிப்படையில் பிழையான ஒன்று, உலக வழக்கத்துக்கு முரணான ஒன்று என் பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பிரகடனத்தின் நோக்கம் இலங் கையில் இருக்கும் சமூகங்களுக்கு இடையே ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்துவதே என்று சொல்லப்பட்டது. அதன் முதலாவது கூற்று, இலங்கையில் எந்த சமூகத்தினரும் தமது அடையாளத்தை இழந்து விடுவோம் என்ற அச் சத்துக்கு ஆளாகாமல் இருக்கும் வகையில் பல்லினத்தன்மையை பேணி வளர்ப்பது பற்றிய தாக இருக்கிறது. இந்தக் கூற்றுக்கு உண்மை யாக இந்தப் பிரகடனத்தை எழுதியவர்கள் இருந்திருப்பார்களேயானால் அவர்கள் இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களாகிய முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் பிரதி நிதிகளையும் இந்தப் பிரகடனப் பேச்சுவார் த்தைக்கு அழைத்திருக்க வேண்டும். ஆனால் அந்த மக்களின் பங்களிப்பு இந்த பிரகடன உருவாக்கத்தில் முற்றாகவே இல்லாமல் இரு க்கிறது. அந்தவகையில் பிரகடனத்தின் முத லாவது கூற்றுக்கும் பிரகடனம் உருவாக்கப் பட்ட விதத்துக்கும் இடையில் மலையளவு இடைவெளி இருப்பதை காட்டுகிறது. அதாவது பிரகடனத்தின் அடிப்படையிலேயே ஏனைய சிறுபான்மை தேசிய இனங்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளன.

அடுத்து, இந்த பிரகடனத்தின் நோக்கம் சமூகங்களுக்கு இடையே ஒரு தேசிய உரை யாடலை ஆரம்பிப்பதே என்று சொல்லப்படு கிறது. இதுவரை காலமும் இனங்களுக்கிடை யேயான அரசியல் பிரச்சனையை தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக பௌத்த சங்கத்தினர் இரு ந்து வந்தமையால் இந்த உரையாடலை அவர் களுடன் தான் தொடங்க வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை குறிப்பிட்டிருந்தது. அதேவேளை பௌத்த சங்கத்துடன் இணை ந்து அவர்கள் மார்கழி 20 ஆம் திகதி லண்ட னில் இருந்து வெளியிட்ட அறிக்கையின்படி இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு தொடர் பாக அரசாங்கத்துடன் எந்தவிதமான பேச்சு வார்த்தைகளிலும் தாம் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளனர். உரிய நேரத்தில் அவற்றை செய்ய வேண்டிய பொறுப்பு தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளைச் சார்ந்தது என்றும் தெரிவித்துள்ளனர்.

அப்படி இருக்கையில் இமாலய பிரகட னத்தின் மூன்றாம் கூற்று புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக் கப்பட வேண்டும் என்றும் தனது அபிலாசையை கூறுகிறது. நான்காவது கூற்று பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக் கல் மூலம் சமூகங்களுக்கிடையே பரஸ்பரம் நம்பிக்கை உருவாக வேண்டும் என்றும் சொல் கிறது. இலங்கையில் அதிகாரப் பரவலாக் கல் பல முறை முயற்சி செய்யப்பட்டு தோல் வியுற்ற ஒரு கருத்தியல் என்பதை இந் நாட்டின் இனப்பிரச்சனையை படித்தவர்கள் எல் லோரும் அறிவார்கள். இந்நாட்டில் ஒரு அர்த் தமுள்ள அதிகாரப் பகிர்வு இல்லாமல் சமூக ங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுவது சாத்தியமல்ல என்பதையும் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள்.

இமாலய பிரகடனத்தின் ஆறாவது கூற்று சர்வதேசத்துடன் ஏற்படுத்திய இரு தரப்பு மற்றும் பல் தரப்பு ஒப்பந்தங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற தனது அபிலாசையையும் வெளிப்படுத்துகிறது. இந்த அபிலாசைகள் எல்லாம் அரசு மற்றும் அரசியல் சம்பந்தப்பட்டவை. ஆக மொத்தத்தில் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு நோக்கிய பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சியே இது என்பது தெளிவாகிறது. ஆனால் மார்கழி மாதம் 22 ஆம் திகதி உலகத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கை இவற்றை தீர்மானிக்க வேண்டியது அரசியல்வாதிகளே என்று குத்துக் கரணம் அடித்துள்ளது. இதை வைத்துப் பார்க்கும் பொழுது இமாலய பிரகடனம் என்பது ஓர் இறந்து பிறந்த குழந்தை என்பது கண்கூடு.

இனங்களுக்கிடையேயான பிரச்சனைக்கு மூல காரணமாக உள்ளது பௌத்த சிங்கள பேரினவாதம் என்ற கருத்தியல். அந்த கருத்தியலை பாதுகாத்து வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் பௌத்த சங்கத்தினரே. ஆகவே அவர்களுடன் பேசுவதன் மூலம் இந்த கருத்தியலை கைவிட்டு அவர்களை வென்றெடுக்கலாம் என்ற பகற்கனவு உலகத் தமிழர் பேரவைக்கு இருக்கிறது போல தெரிகிறது. உலகத் தமிழர் பேரவைக்கு மட்டுமல்ல காலத்துக்கு காலம் இந்த பகற்கனவு தமிழ் தரப்பு அரசியல்வாதிகளாலும் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. சுதந்திரத்துக்கு முன்னர் இருந்த காலத்தில் இருந்தே இவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடந்து வந்திருக்கின்றன. தமிழ் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டும் பேரினவாதக் கருத்தியலை சிங்கள தலைவர்கள் கைவிடவில்லை. அண்மைக்காலத்தில் நல்லாட்சி அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை கைவிட்டு அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கலாம் என்று தமிழ் அரசியல்வாதிகள் முயற்சித்து தோல்வி கண்டதையும் நாம் கண்டிருக்கிறோம். இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் இருந்தே பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகள் உருவாக்கப்பட வேண்டும். அதனை விடுத்து பௌத்த சங்கத்துடன் புதிதாக ஒரு பேச்சுவார்த்தையை தொடங்குவதன் ஊடாக பௌத்த சிங்கள பேரினவாத கருத்தியலை சிறிலங்காவிலிருந்து அகற்றி விடலாம் என்று நினைப்பது முட்டாள்தனம்.

அதற்கும் மேலாக, இந்த கருத்தியல் வெற்றிடத்தில் இருந்து பௌத்த சங்கத்தினரின் மனங்களில் வந்து குடியிருந்த ஒன்று அல்ல. இந்த குருமார்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்தே வருகிறார்கள். சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் இந்தியா மீதான அச்சத்துக்கும் அதன் தொடர்ச்சியாக ஈழத்தமிழர் மீதான அச்சத்துக்கும் ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. இலங்கையின் பாடப் புத்தகங்களில் கற்பிக்கப்படும் மகாவம்சத்தில் தொடங்கி இன்றைய அரசியல்வாதிகளால் மேடைகளில் உமிழப்படும் இன வெறுப்புக்கு பௌத்த குருமார்தான் காரணம் என்று சொல்லி விட முடியாது. இலங்கையில் பௌத்த சங்கத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பல தடவைகள் நடந்துள்ளன. திசரானி குணசேகராவால் எழுதப்பட்டு நிமிர்வு 49 (மார்கழி – தை 2022) இதழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட 'பௌத்தத்தின் மூன்றாவது அலை நீடிக்குமா?' என்ற கட்டுரை இதனை விரிவாக விபரிக்கிறது. அண்மையில் நடந்த 'அரகலய' போராட்டத்தில் பௌத்த சங்கத்தினரை மக்கள் நிராகரித்ததையும் அவர்கள் பின்னடைந்து இருந்ததையும் நாம் நேரடியாகவே பார்த்தோம்.

சிறிலங்கா அரசியல்வாதிகளே தமது தேவைகளுக்காக பௌத்த சங்கத்தினரைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். சங்கத்தினருக்கு நிதியுதவி அளிப்பவர்களும் அவர்களாகவே இருக்கிறார்கள். இந்த இரு தரப்பினரும் தமது இருப்புக்காக ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கிறார்கள். இது ஒரு வகை ஒட்டுண்ணி உறவு. ஆனால் இந்த உறவை தீர்மானிக்கின்ற சக்தியாக அரசியல்வாதிகளே இருக்கிறார்கள். இனப்பிரச்சனையை தீர்க்க பௌத்த குருமார் தடையாக இருக்கிறார்கள் என்ற ஒரு மாயையை உருவாக்கி சிங்கள அரசியல்வாதிகள் பௌத்த குருமாரின் பின்னால் ஒளிந்து கொள்வார்கள். ஆனால், அவர்கள் நினைத்தால் இந்த பௌத்த குருமாரை ஒரே நாளில் புறம் தள்ளி விட முடியும். அப்படி இருக்க அரசியல் மாற்றத்திற்காக பௌத்த குருமாருடன் பேசுவோம் என்று புறப்பட்டிருப்பவர்கள்

சிங்கள மக்கள் பற்றியும் அவர்களை கவரும் அரசியல் பற்றியும் புரிதல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகிறது.

அதேவேளை, பௌத்த குருமார்கள் சிறி லங்கா அரசியலில் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கிறார்கள் என்ற மாயையை ஏற்படுத்தி இனப்பிரச்சனையில் சிங்கள அரசியல்வாதிகளின் பங்கை குறைத்து மதிப்பிடுவதற்கான ஒரு முயற்சியாகவே இதனை பார்க்க வேண்டும். அதன் மறுபுறமாக, சனாதிபதி ரணில் மட்டுமல்ல இனப் படுகொலையை நேரடியாக முன்னின்று நடத்திய முன்னாள் சனாதிபதி மகிந்தா மீது இருக்கும் கெட்ட பெயரை குறைக்கும் முயற்சியாகவும் இதனை பார்க்க வேண்டும். மேலும், அரகல போராட்டத்தில் செல்வாக்கு இழந்து கொண்டிருந்த பௌத்த குருமாரின் பிம்பத்தை தூக்கி நிறுத்தும் ஒரு முயற்சியாகவும் இதனை பார்க்க வேண்டும்.

இமாலய பிரகடனத்தில் ஈடுபட்ட உலகத் தமிழர் பேரவைக்கு இவை எல்லாம் தெரியாத விடயங்களா, அல்லது தெரிந்து கொண்டே இதில் ஈடுபட்டார்களா என்பது ஆராயப்பட வேண்டும். இவை பற்றிய தெளிவில்லாமல் அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பார்களாகவே இருந்தால் இந்த முயற்சியில் ஈடுபடுவதற்கான எந்தவிதமான தகுதியும் அவர்களிடம் இல்லை என்பது தெளிவாகிறது. தெரிந்து கொண்டும் இதில் ஈடுபட்டிருப்பார்கள் என்றால் அவர்களின் உள்நோக்கம் கேள்விக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

அதேவேளை, தமிழர் தரப்பில் இந்த பிரகடனம் தொடர்பாக எழுந்திருக்கும் எதிர்ப்பு நியாயமான ஒன்றாகவே தெரிகிறது. குறித்த பிரகடனத்தில் நடந்த இனப்படுகொலை தொடர்பிலோ, இன்று வரை தமிழர் தாயகத்தில் தொடரும் காணி அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம், அரசியல் கைதிகள் பிரச்சனை, பயங்கரவாத தடை சட்டத்தின் தொடர் பயன்பாடு, நினைவு கூர்தலில் பங்கேற்றால் கைது தொடர்பில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. இந்த பிரகடனத்தின் நோக்கம் பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியுள்ள நிலையில் அதிலிருந்து மீள்வதற்கு புலம் பெயர் முதலீடுகளை ஊக்குவிப்பதுவும் தற்போதைய சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை ஊக்குவிப்பவர் என்ற பிம்பத்தை உருவாக்குவதுமே என்று தமிழ் மக்கள் கருது கிறார்கள்.

இந்த பிரகடனத்துக்கு எதிராக வடக்கு கிழக்கை சேர்ந்த 75 இற்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகள் இணைந்து வெளியிட்ட அறிக்கை முக்கியமானது. அதில் முக்கியமாக தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, “தாயகத்தில் வாழும் மக்களின் சார்பில் பேசுவதற்கும் ஒப்பந்தங்களையும் பிரகடனங்களையும் மேற்கொள்வதற்கும் தாயகத்தில் அவர்களால் அமைக்கப்படும் பரந்த ‘கூட்டு முன்னணி’ ஒன்றிற்கே தார்மீக உரிமை உள்ளது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகமயமாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ நலன்களுக்கு இசைவாக பூகோள அரசியல் ஒழுங்குகள், தேசிய அரசுகளுக்கு உட்பட்ட அரசியல் சமூக பொருளாதார ஒழுங்குகள் என்பவற்றை முன்னிறுத்தி உள்நாட்டு பிரச்சனைகளின் தன்மைகளையும், கதையாடல்களையும் மீள கட்டமைப்புச் செய்யும் சர்வதேச அரசியல் அட்டவணைக்கு ஏற்பவே இமயமலைப் பிரகடன முயற்சி நிதியீட்டம் செய்யப்பட்டு அரங்கேற்றப்படுகிறது என்பதை நாம் தெளிவாக புரிந்துள்ளோம்.

உலகங்கெணும் வாழும், அரசியல் பொருளாதார அடக்குமுறைக்கு உட்படும், நேரடியான அரச வன்முறைக்கு உட்பட்டு வரும், அரசற்ற தேசிய இனங்கள், விளிம்பு நிலை மக்கள் என பல்வேறுபட்ட தரப்பினரை குரலற்றவர்களாக மாற்றும் பாரிய கருத்தியல் மேலாதிக்கத் திட்டங்கள், குறித்து நாம் விழிப்புடன் இருக்கிறோம். இப்பூமியின் இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கும் ஒரு பொருளாதார அரசியல் முறைமையின் அரூபகரங்கள் எம்மைச் சூழ்ந்திருப்பதை நாம் அறிவோம்.

உலகத் தமிழர் பேரவை – சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள இமயமலைப் பிரகடனம் இவ் அரூபகரங்கள் பின்னும் மாய வலையின் ஒரு கண்ணிதான் என்பதும் எமக்கு தெரியும். அவற்றுக்குப் பொருத்தமான வகையில் எதிர்வினையாற்றக் கூடிய பரந்த அரசியல் முன்னணியை

தேசிய எல்லைகளுக்கு உட்பட்டும், அதற்கு வெளியேயுள்ள புலம்பெயர் தமிழ் மக்களையும் உள்வாங்கி, தாயகத்தில் வாழும் ஒடுக்கப்படும் மக்கள் உருவாக்குவர் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறோம்.” என்றுள்ளது.

2009 க்குப் பிறகு ஈழத்தமிழரது அரசியலில் புலம்பெயர் அரசியல் தான் அதிகம் செல்வாக்கு செலுத்தியது. போரின் பின்னரான பல போராட்டங்களை அணையாமல் பாதுகாத்ததும், போரில் வீழ்ந்த மக்களை ஓரளவுக்காவது தூக்கி நிமிர்த்தியது புலம்பெயர் பொருளாதாரங்கள் தான். இவற்றுக்கும் மேலாக ஐ.நா. சபையில் இனப்படுகொலைக்கு நீதி கேட்டு எமது பிரச்சனையை இன்னமும் சர்வதேச ரீதியில் நீர்த்துப் போகாமல் வைத்திருப்பதும் புலம்பெயர் சமூகத்தினர் தான். தாம் வசிக்கும் நாடுகளில் எல்லாம் அரசியல் ரீதியில் செல்வாக்கு செலுத்தி அந்த நாட்டு பாராளுமன்றங்களில் எம் மீது நடத்தப்படும் அநீதிகள் பற்றி ஒலிக்கச் செய்து கொண்டிருப்பதும் இவர்கள் தான். அந்தந்த நாடுகளில் இனப்படுகொலை தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றியும் விழிப்புணர்வை உருவாக்கியும் வருபவர்கள் இவர்கள் தான்.

இப்படி ஒரு வலுவான நிலையில் இருக்கும் புலம்பெயர் தேசத்தை பலவீனமாக்க வேண்டிய தேவை சிறிலங்கா அரசாங்கத்துக்கு உள்ளது. முக்கியமாக நாட்டின் பொருளாதாரத்தை மீள் கட்டமைக்கவும், பங்குனி மாதம் நடக்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் சிறிலங்கா மீதான கண்டனங்களை குறைத்துக் கொள்ளவும் வேண்டிய அவசிய அவசரத்தில் இருக்கிறது சிறிலங்கா. அந்த நோக்கத்தை நோக்கிய நடவடிக்கைகள் தான் துவாரகா விடயமும், இமயமலை பிரகடனமும். துவாரகா உயிருடன் இருப்பதனால் அவர் போலவே பல்லாயிரக்கணக்கானவர்கள் இறுதி யுத்தத்திலிருந்து தப்பி ஓடி புலம்பெயர் தேசங்களில் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், ஆகவே அங்கு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவு என்ற பிம்பத்தை சிறிலங்கா அரசு உருவாக்க நினைக்கிறது. இமாலய பிரகடனத்தின் மூலம் ஒரு சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே சிறிலங்கா மீதான கண்டனங்களை குறைத்துக் கொள்



வோம் என்று சர்வதேசத்தை சொல்ல வைக்கலாம் என்று கணக்கு போடப்படுகிறது.

உண்மையில் எவ்வகையான ஒப்பந்தங்களோ, பிரகடனங்களோ இந்த மண்ணிலிருந்து சிவில் சமூகங்களை இணைத்த கூட்டாக வெளிவர வேண்டும். அப்போது தான் எம் மக்களின் அடிப்படை கோட்பாடு பிரச்சனைகளோடு அன்றாடம் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்கவும் உதவும். அதை விடுத்து இப்படி மிகவும் இரகசியமாக மக்களுக்கு தெரியாமல் கருக்கொள்ளும் பிரகடனங்களால் எங்களுக்கு எந்த நன்மையும் இல்லை. மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு மக்களிடமிருந்து வர வேண்டும். அத்தீர்வுகள் இறக்குமதி செய்யப்பட முடியாதவை. 13 ஆம் திருத்தச் சட்டமூலத்தின் தோல்வி அதனை தெளிவாக காட்டி நிற்கிறது.

அதேவேளை தமது பிரச்சனைகளுக்கான தீர்வுக்காக போராட வேண்டிய கடமை மக்களிடம் இருக்கிறது. அதற்காக அவர்கள் தம்மை கட்டமைத்துக் கொண்டு தமது அரசியல் பலத்தை தொடர்ந்து பறைசாற்றிக் கொண்டு இருக்க வேண்டும். தமக்கு எதிராக எடுக்கப்படும் எந்த நடவடிக்கை தொடர்பாகவும் அந்த மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என்ற பயம் அரசியல்வாதிகளுக்கும் மற்றவர்களுக்கும் வர வேண்டும். அப்படி இல்லாத சந்தர்ப்பங்களில் தான் அந்நியர்கள் மீட்பர்களாக தீர்வுப் பொதியுடன் வந்து இறங்குவார்கள். மக்களின் அபிலாசைகளை தகர்த்து தமது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற எத்தனிப்பார்கள். அவ்வாறான

(23ஆம் பக்கம் பார்க்கவும்)

(03ஆம் பக்க தொடர்ச்சி)

கலை, கல்வித் துறைகளில் ஸ்திரமான கட்ட மைப்புக்களுடன் கூடிய கனவுகளில் இருந்து விலகாத சமூகமொன்றை கட்டியெழுப்புதலே எம் இலக்காக இருக்க வேண்டும். சுருங்கச் சொன் னால் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வை இலக் காக கொண்ட அபிவிருத்திப் பாதையில் பயணி க்க வேண்டுமென்கிறேன். அதற்கு அமைச்சுப் பதவிகளை ஏற்க வேண்டுமென்றில்லை, அயல் நாட்டிடம் மண்டியிட வேண்டுமென்றுமில்லை.

கவனக்கலைப்பான்களிடம் சிக்கித் திளைக்கும் இளைய சமூகமும், தமது தன்ன லங்களுக்காக இளம் சமூகத்தை தவறாக வழிநடத்தும் மூத்த தலைமுறையும் குறு கிய தத்தமது நோக்கங்களைத் தவிர்த்து ஒன்றுபட்ட ஓர் உயரிய இலக்குக்காக ஒரு குடையின் கீழ் அணி திரள வேண்டும். தற் போதைய தலைமைத்துவ பற்றாக்குறை நம் சமூகத்திலிருந்து அகல வேண்டுமாயின் அரசி யல் பொதுவுடமையாக்கப்பட வேண்டும். கட்டு ரைகளில் தனிநபர் விமர்சனங்களை வெளிப் படுத்துவது தவறென்பதால் தமிழ் தரப்பு அர சியல்வாதிகள் தப்பித்துக் கொண்டனர். இல்லா விடின் இவர்கள் பற்றிப் பேசித் தீர்க்கவே எனக்கு இருபது பக்கங்கள் போதாது. எமது தரப்பிலே தரமான தலைமைகள் உருவாக வேண்டும். அதே தலைமைகள் ஆசன ஆசையுடன் ஆயுள் முழுவதும் அவ்விடங்களை அலங்கோலப்படுத் தாமல் அடுத்த தலைமுறையிடம் பொறுப்புக் களை ஒப்படைத்து விட்டு உறுதுணையாக நின்று வழிகாட்ட வேண்டும். தலைவனுக்குரிய அடிப்படைப் பண்புகளுள் ஒன்று அவனுக்கு பின் னால் வழிநடாத்தக் கூடிய தளபதியையாவது தயார்படுத்தி இருப்பதாகும்.

ஆக்கபூர்வமான கருத்துகள் அனைவரி டமிருந்தும் உள்வாங்கப்பட வேண்டும். எமது இனத்தின் பெருஞ் சாபக்கேடான சாதியம் அடி யோடு அழிக்கப்பட வேண்டும். சாதியத்தை சாவடிக்க தற்கொலைக் குண்டுதாரி தேவை யென்றால் தயக்கமே இன்றி முதலாவது நப ராக நான் அங்கு நின்றிருப்பேன். எனது இன மென்று மார்தட்டிக் கொள்ளும் நான், வெட்கித் தலை குனியும் ஒரு விடயம் இந்தச் சாக்கடை சாதியமாகும். இந்தச் சாதியவாதமும் பிரதேச வாதமும் என் இனத்திலிருந்து அடியோடு களையப்படும் வரைக்கும் விடிவென்பதில்லை.

அடுத்ததாக, கடந்த காலங்களில் எமது பயணத்தில் தவறவிடப்பட்ட இன்னுமொன்றை நினைவுபடுத்த வேண்டிய பொறுப்பிருக்கிறது. இற்றைக்கு இருநூறு வருட வரலாறைக் கொண்ட எமது மலையக மக்களின் அபிலா சைகள், அடிப்படைத் தேவைகளைப் பற்றி சிந்திக்க மறந்திருக்கிறோம். சில சந்தர்ப்பங் களில் பேசப்பட்டாலும் அவை பேச்சளவோடு நின்றுவிட்ட சந்தர்ப்பங்களே அதிகம். இனிவரும் காலங்களில் தமிழ் சமூகமென்பது வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் நாடெங்கும் வாழும் அனைத்து தமிழ் மக்களின் தேவைக ளையும், தேடல்களையும் கருத்திற் கொண்டு ஒரு குடையின் கீழ் ஒருசேர பயணிக்க வேண்டு மென்பது எனது பேரவா.

ஓடாத மானும், போராடாத இனமும் மீள முடியாதென்ற கரிகாலனின் கூற்றுக்கிணங்க யாமும் இன்றுவரை போராடிக் கொண்டே தான் இருக்கிறோம். ஆயுதப் போராட்டம் முடிந்து போராட்ட வடிவம் மாறுபட்டு இருக்கலாம் ஆனால் கனவுகள் இன்னும் வாழ்ந்து கொண்டி ருக்கின்றன. முள்ளிவாய்க்கால் நினைவேந்த லாயினும் சரி, பிற நினைவு நாட்களாயினும் சரி நாம் துக்க தினமாக எண்ணி துவண்டு போவதற்காக அல்ல, மேலும் உறுதியுடன் மாறாத இலக்குடன் பயணிப்பதற்காகவே ஆகும். எமது வரலாற்றை வாழ்வியலாக்கி பண்பாட்டு பாரம்பரியங்களோடு அடுத்த சந்ததியிடம் ஒப்ப டைப்போம்.

புலம்பெயர் சமூகமே உங்களிடம் வினய மாக கேட்டுக் கொள்கிறேன். பொருளாதார ரீதியில் எமது இனம் பலப்படுவதற்குரிய நீடி த்த திட்டங்களை வகுத்து அவற்றை நடை முறைப்படுத்துங்கள். தங்கள் முதலீடுகளை தாயகத்தில் அதிகப்படுத்தி எமது சமூகத்தை உறுதி கொள்ளச் செய்யுங்கள். தாயகப்பரப் பிலே பெருமளவிலான நீண்டகால நிலைத்த தன்மையுடைய முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இளைஞர்களுக்கான வேலைவாய்ப் புக்கள் வழங்கப்பட்டு எமது மனித வளங்கள் சுரண்டப்படுவதும், ஏற்றுமதி செய்யப்படுவதும் குறைவடைய வேண்டும். மண்ணையும் மக்க ளையும் இழந்துவிட்டு எதை நோக்கிப் பய ணிக்க போகிறோம் என்பதை ஒரு கணம் சிந்தி யுங்கள்.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந் தான் உள்ளியது உள்ளப் பெறின்" வள்ளுவர் வாக்கினை சிரமேற்கொண்டு நினைப்பதோடு நின்றுவிடாது எம் கனவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்க முனைய வேண்டியது இன்றியமையாதது. நாம் பயணிக்க வேண்டிய பாதை, நெறிப்படுத்த வேண்டிய விடயங்கள், களையப்பட வேண்டிய கூறுகள் என பல்வேறுபட்டவற்றை இக்கட்டுரையில் தொட்டுச் சென்றிருக்கிறேன். இவற்றையெல்லாம் நினைவிற்கொண்டு முறையான திட்டமிடலுடன் முழுமூச்சாக இலக்கை நோக்கிய இலட்சியப் பயணத்தில் ஒருமித்த கனவுகளுடனான ஒரு தேசிய இனமென்ற ஆகுதி பூண்டு அடியெடுத்து வைப்போம்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த 30 ஆண்டுகால இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்களிலும் வடக்கு கிழக்கு மக்கள் தரை, வான், கடல் மார்க்கமாக அரச ஆயுதங்களால் கொல்லப்பட்டார்கள். தமது வீடுகளிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள். பொருளாதாரத் தடைகளுக்கு ஆளானார்கள். இவ்வாறாக அடக்குமுறைகளுக்கு உள்ளான மக்கள் கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் அவற்றுக்கு எதிராக போராடிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்ததில் வியப்பு எதுவும் இல்லை. மக்களின் இந்த செயற்பாடு வெறும் வெற்றிடத்திலிருந்து வரவில்லை.

ஒரு மக்கள் கூட்டம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலங்கள் அபகரிக்கப்படும் பொழுது, அவர்களின் வாழ்வாதாரமாக இருந்த விவசாயம், கடற்றொழில் என்பவை அழிக்கப்படும் பொழுது, அரச மற்றும் தனியார் வேலைகள் மறுக்கப்படும் பொழுது, எந்த அடையாளத்தை முன்வைத்து இவை எல்லாம் செய்யப்படுகின்றதோ அந்த அடையாளத்தை பற்றிப் பிடித்துக் கொண்டு அம்மக்கள் கூட்டம் போராடத் தொடங்கும். தமிழ் மக்களின் தேசிய இனப் போராட்டமும் இவ்வாறு தான் தோற்றம் பெற்றது. எந்த சக்திகள் எல்லாம் அந்தப் போராட்டத்தின் பக்கம் தம்மை இணைத்துக் கொண்டனவோ அவற்றை மக்கள் ஆதரிக்கும் நிலைக்கு பேரினவாதத்தால் தள்ளப்பட்டார்கள். அந்த வகையில் கடைசிவரை தமிழ்த் தேசியத்துடன் தங்களை இனம் காட்டிக் கொண்ட புலிகளை மக்கள் விரும்பியோ விரும்பாமலோ ஆதரித்தார்கள்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரும் தமிழ் தேசியம் என்ற ஒன்று மட்டுமே தமது வளங்கள் தொடர்ந்து பறிபோகாமல் இருப்பதற்கான காப்பரண் என்று தமிழ் மக்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையின் பின்னணியில் தான் புலிகள் மீது வைக்கப்படும் எதிர்மறை விமர்சனங்கள் பெரும் கண்டனங்களுக்கு உள்ளாகின்றன. புலிகள் போன்ற அர்ப்பணிப்போடு தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்கக் கூடிய இன்னொரு அமைப்பு வரும்வரை இந்த நிலை தொடரும். தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கக் கூடிய ஒரு பலமான அமைப்பைக் கட்டாமல் வெறும் உதிரிகளாக அல்லது தமிழ்த் தேசியத்தை நிராகரித்துக் கொண்டு புலிகள் மீது எதிர்மறை விமர்சனம் வைப்பது எதற்கும் உதவப் போவதில்லை. மாறாக அவ்வாறு விமர்சனம் வைப்பவர்களை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தவே செய்யும்.

புலிகளை பாசிஸ்டுகள் என்றும் சிறிலங்கா அரசை பாசிச கூறுகளை மட்டும் கொண்ட ஓர் அரசு என்றும் கட்டமைக்கப்படுகிறது. புலிகள் ஜனநாயகத்தை முற்றாக மறுதலித்ததாகவும் சிறிலங்கா அரசில் ஜனநாயக கூறுகள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஓர் அரசு தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுகிறது என்பதனால் மட்டும் அது பாசிச அரசு அல்ல என்றாகி விடாது. அப்படி பார்க்கப்போனால் இன்றைய இஸ்ரேலிய அரசு கூட ஒரு ஜனநாயக அரசு தான். விடுதலைப்புலிகளின் போராட்ட காலத்தில் தெற்கிலும் கருத்துச் சுதந்திரம் இருக்கவில்லை. பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டார்கள். தெற்கில் தமிழ் மக்கள் கண்காணிக்கப்பட்டார்கள். வடக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ் தேசத்தில் இன வழிப்பு மும்மரமாக நடைபெற்றது. சிங்கள இனம் அரசினால் முன்னிறுத்தப்பட்டது. இவை எல்லாம் சிறிலங்கா அரசை ஒரு பாசிச அரசாகவே சுட்டி நிற்கின்றன. உண்மையில் சிறிலங்கா அரசு இன்றும் தனது இனவழிப்பு நடவடிக்கைகளின் மூலம் தான் ஒரு பாசிச அரசு

தான் என்பதை நிரூபித்துக் கொண்டு இருக் கின்றது.

புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருந்தன. அந்த முரண்பாடுகள் மக்களால் வெளிப்படுத்தப்படுவதை புலிகள் முற்றாக தடுக்கவில்லை. புலிகளின் நிழல் அரசின் கீழ் வாழ்ந்த பலரும் இதற்கு சாட்சி சொல்வார்கள். புலிகளால் நிறுவப்பட்ட நிழல் அரசிலும் பல ஜனநாயகக் கூறுகள் இருந்தன. மக்கள் தமது குறைகளை எடுத்துச் சொல்லி நீதியை பெற்றுக் கொள்ளக் கூடிய வழி வகைகள் இருந்தன. புலிகள் மீது விமர்சனம் வைக்கும் அளவுக்கு கூட கலை கலாச்சார பரப்பில் வெளி இருந்தது. எவ்வாறு சிறிலங்கா அரசு பாசிச அரசு இல்லை பாசிச கூறுகளை கொண்ட அரசு என்ற வாதம் வைக்கப்படுகிறதோ அந்த வாதம் புலிகளுக்கும் பொருந்தும்.

புலிகள் பாசிஸ்டுகள் என்றால் அவர்கள் பாசிஸ்டுகளாக வந்ததற்கு தாமும் ஒரு கார ணம் என்பதை இன்று அந்த விமர்சனத்தை முன்வைக்கும் புத்திசீவிகளும் இடதுசாரிகளும் புறந்தள்ளி விட்டு போக முடியாது. அதே போன்று அரசாங்கத்துடன் இணைந்து செயற் பட்டவர்களுக்கும் அதில் பங்கு இருக்கிறது. இன்றும் புலிகளின் தோற்றுவாய்க் காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அந்த காரணங்களை களைவதற்கான செயற்பாடுகளை எடுக்காமல் புலிகளை பாசிஸ்டுகள் என்று சொல்வது மக் களை மேலும் புலிகளை நோக்கியே ஓடச் செய்யும்.

புலிகள் பாசிஸ்டுகள் என மேடை போட்டு முழங்குபவர்கள் சாதாரணமாகவே வெகுஜ னத் தளத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படும் நிலையே உள்ளது. இப்போதும் தொடரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம், காணி அபகரிப்பு போராட்டம், மேய்ச்சல் தரை போராட்டம் உள்ளிட்ட தமிழ் மக்கள் அன்றா டம் சிங்கள பேரினவாதத்தால் எதிர்கொள்ளும் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அந்த தரப்பினர் தொடர்ச்சியாக போராட மாட்டார்கள். அவர்களால் உண்மையாக போராடவும் முடி யாது. வேண்டுமானால் சமூக வலைத்தளங்க ளில் ஒரு இடுகையை இட்டு விட்டு காணாமல் போய்விடுவார்கள். அந்த மக்களின் அவல ங்களை அவர்களுடன் இருந்து நேரடியாக

> **புலிகள் பாசிஸ்டுகள் என்றால் அவர்கள் பாசிஸ்டுகளாக வந்ததற்கு தாமும் ஒரு கார ணம் என்பதை இன்று அந்த விமர்சனத்தை முன்வைக்கும் புத்திசீவிகளும் இடதுசாரி களும் புறந்தள்ளிவிட்டு போக முடியாது**

முகம் கொடுப்பார்களேயானால் தமது கருத்து கள் தம்மை ஏன் மக்களிடமிருந்து அந்நியப்ப டுத்துகின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இவர்களின் இந்த வகையறா கருத்துகள் சிங்கள பேரினவாதத்தையே பலப்படுத்தும். சிங்கள ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் எவ்வாறு தமிழ் மக்களுக்குள் ஊடுருவி நச்சு விதைகளை விதைத்து சமூகத்துக்குள் முரண் பாடுகளை தோற்றுவித்து சிதைக்க விரும்பி னார்களோ அதையே இப்படியானவர்களும் செய்ய முனைந்தால் எம்மினத்தின் எதிர்காலம் என்னவாவது?

புலிகள் பாசிஸ்டுகள் என்பார்கள், அவர் களின் போராட்ட வழிமுறையும் பிழை என்பார் கள், தமிழ் மக்களுக்கு போராட்டமே தேவை யில்லை என்பார்கள், போராடி பலதையும் இழந்து விட்டோம் என்பார்கள். ஆனால், காஸாவில் நடப்பவற்றை கண்டித்து பாலஸ்தீ னியர்களுக்கு ஆதரவாக கூட்டம் போட்டு முழங் குவார்கள். இங்கேயும் அதே சம்பவங்கள் தான் நடந்தது என்றால் பதில் சொல்லாமல் நகர்ந்து விடுவார்கள்.

ஆக மொத்தத்தில் இவர்கள் யாருமே மக்களோடு இல்லை. மக்களின் ஆத்மார்த்தமான உள்ளுணர்வுகளை புரிந்து கொள்ளும் பக்கு வமும் இல்லை. தாங்கள் பிறந்து வளர்ந்த சூழலும் பின்னர் அறிந்து கொண்டவைகளையும் வைத்து அதனை சரியாக பகுத்தாராயாமல் மேடை போட்டு முழங்கி அந்நியப்படுவதை தவிர வேறொன்றுமில்லை. இங்கே நாம் மக் கள் என்று குறிப்பிடுவது இந்த இலங்கைத் தீவில் அரச அடக்குமுறைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் எல்லா இனத்தையும் சேர்ந்த மக்களையும் தான். அரகலய போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்க இவர்களால் முடி யாமல் போனமைக்கான பிரதான காரணம்

அந்த மக்களின் உள்ளுணர்வுகளை புரிந்து கொள்ளும் பக்குவமின்மையே தான்.

தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகள் என்று குறிப்பாக வரும் பொழுது இவர்களின் புரிதல் இன்னும் மோசமாக இருக்கின்றது. இன்று தமிழினம் எப்படி நகர வேண்டும் என் கிற தூர தரிசனம் இவர்களுக்கு இல்லை. கடந்த காலம் பற்றிய வெற்று விமர்சனங்கள் மட்டும் தான் இவர்களிடம் இருக்கின்றன. இன ரீதியாக ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் தங்களை எவ்வாறு ஒரு பலமான இனமாக கட்டமைத்துக் கொண்டு தமது உரிமைகளை வென்றெடுக்க போராட வேண்டும் என்பதற்கான சிந்தனையை இவர்கள் வளர்க்க வேண்டும். அதனை தமிழ் மக்களுடன் கலந்துரையாடி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தன்னை நம்பியிருக்கும் மக்களையும் தமது இலட்சியத்தையும் பாதுகாப்பதற்காக எடுத்த சில நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு அந்த அமைப்பையே பாசிஸ்டுகள் என்று ஒட்டுமொத்தமாக சொல்லிவிட முடியாது. இது ஒரு பிரச்சனையை வெறுமனே கறுப்பு வெள்ளையாக பார்ப்பதற்கு ஒப்பானது. தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டமானது உலகில் நடந்த மற்றைய போராட்டங்கள் போன்று பல சிக்கல்களை கொண்டது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல் எல்லா வற்றிலும் கோலோச்சிக் கொண்டிருந்த அரச அடக்குமுறை, வடக்கு கிழக்கில் வாழ்ந்த பல்வேறு இன மக்களுக்குள்ளே இருந்த ஊடாட் டங்கள் மற்றும் தமிழ் இனத்துக்குள்ளேயே இருந்த சாதிய, வர்க்க, பாலின வேறுபாடுகள் தொடர்பான பிரச்சனைகள் என்பவற்றை எல்லாம் ஆராய்ந்து அதன் நுணுக்கங்களை பேசாமல் அந்த மக்களை தலைமை தாங்கிய ஒரு இயக் கத்தை ஒரு குறுகிய அடையாளத்துக்குள் அடக்க முனைவது அறியாமை.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத வாறு ஒரு பொருளாதார நெருக்கடியை முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் மேலும் மேலும் மக்களின் மீது பொருளாதார சுமைகளை ஏற்றிக் கொண்டிருக்கிறது. நாட் டின் பல பகுதிகளிலும் மக்களுக்கு ஒரு நேர உணவு மட்டுமே உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ளது. இளையோரிடையே போசாக்கின்மை அதிகரித்துக் கொண்டு போகின்றது. இந்த நிலையில் அரசாங்கத்தின் அநியாயமான வரிக் கொள்கைகளை எதிர்த்து போராட வேண்டிய நிலையில் மக்கள் இருக்கிறார்கள்.

இந்த போராட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் அனைவரும் பங்கெ டுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அதற்கான ஒரு ஐக்கிய முன்னணியை கட்ட வேண்டியது எல்லா சமூகங்களிலும் இருக்கின்ற முற்போக்கு சக்திகளின் கடமை. இப்படியான நிலைமையில் இந்த முற்போக்கு சக்திகள் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கும் ஒரு தரப்பினரே தமது இனத்தின் பாதுகாவலன் என்று ஒரு சமூக மக்கள் நம்பிய ஓர் அமை ப்பை பாசிஸ்டுகள் என்று முத்திரையிட்டு இருக்கிறார்கள். இந்த முட்டாள்தனமான நடவடிக்கை அந்த மக்களுடன் ஒரு ஐக்கிய முன்னணியை கட்டுவதை பன்மடங்கு சாத்திய மில்லாமல் செய்துள்ளது.

இப்படி முத்திரை குத்திவிட்டு அந்த மக்கள் மத்தியில் உரையாட முற்பட்டால் அந்த மக்கள் உரையாடுவதற்கு தயாராக இருக்க மாட்டார்கள். குறிப்பாக இன்றும் அன்றாடம் அரச ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கும் மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள். இந்த முத்திரை குத்தல் அரசுக்கு ஆதரவானது என்றே அவர்கள் புரிந்து கொள்வார்கள். எல் லாவற்றுக்கும் மேலாக அந்த முத்திரை இடுப வர்கள் அவர்களுக்கு வெளியே இருந்து வரும் பொழுது அதனை மேலும் மூர்க்கமாக எதிர்ப் பார்கள். இதுதான் மனித இயல்பு.

அது பிற்போக்கானது என்று வரட்டுத் தனமாக வாதிடுபவர்கள் இருக்கத்தான் செய் வார்கள். ஆனால் ஐக்கிய முன்னணி ஒன்றை கட்டுவதற்கான மூலோபாயத்தில் இவ்வாறான சிக்கல்களை தவிர்ப்பது என்பது தந்திரோபா யமாக இருக்க வேண்டும். அதற்காக இந்த உரையாடல் நடத்தப்படக் கூடாது என்பதல்ல. முதலில் ஐக்கிய முன்னணியை கட்டிய பின் இந்த உரையாடல் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.

ஓர் அமைப்பின் மீது விமர்சனம் வைப்பதற்கான கருத்துச் சுதந்திரத்தை மறுப்பது ஒரு அடக்குமுறை என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு பொத்தாம் பொதுவாக சொல்லி

விட முடியாது. ஒரு அரசு தனது பலத்தைக் கொண்டு சில கருத்துகளை அடக்குவதும் தனக்கு இயைபான கருத்துகளை பிரபலப் படுத்துவதும் கருத்துச் சுதந்திரத்தை அடக்கும் செயற்பாடுகள் தான். ஓர் அரசுக்கு எதிராக போராடிய அமைக்கு எதிரான ஒரு விமர்சனத்தை வைப்பது என்பது கருத்து சுதந்திரம் என்றாலும் ஒரு வகையில் அது அரசுக்கு ஆதரவான செயற்பாடு தான். அவ்வாறாக தம்மை அடக்கும் அரசுக்கு ஆதரவான கருத்தை வைத்துள்ள ஒருவர் தமக்கு வந்து வகுப்பு எடுப்பதை, அது எந்த விடயமாக இருந்தாலும் கூட எந்த ஒரு மக்கள் கூட்டமும் ஒத்துக் கொள்ளாது.

மேலும், ஒரு அமைப்புக்கு எதிராக அரசுக்கு துணைபோகும் அளவுக்கு விமர்சனம் வைப்பதற்கு இவர்களுக்கு கிடைக்கும் மேடை அந்த அமைப்புக்கு ஆதரவாக பேசக் கூடிய வர்களுக்கு கிடைக்காது என்பதை குறித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான அசமத்துவம் இருக்கும் இடத்தில் கருத்துச் சுதந்திரம் பற்றிப் பேசுவது எந்த அளவிற்கு நியாயமானது? கருத்துச் சுதந்திரம் பற்றிப் பேசுபவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

---

(18ஆம் பக்க தொடர்ச்சி)

முயற்சிகள் நடக்கும் வேளைகளில் மட்டும் பல்வேறு குழுக்களாக அறிக்கை விடுவதிலோ அல்லது ஓர் அறிக்கையில் எல்லோரும் சேர்ந்து கையொப்பம் இடுவதிலோ பயனில்லை. அது இது போன்ற முயற்சிகளின் மீள நிகழாமையை தடுக்கப் போவதில்லை.

குறுகிய சிந்தனையுள்ளவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு எமது இனம் பலியாகாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் ஒரு பலமான மக்கள் அமைப்பு அவசியாமாக இருக்கிறது. அது தொடர்ச்சியாக தனது பிரசன்னத்தை உலகுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். வெறுமனே நிகழ்வுகளுக்கு எதிர் வினை (reactive) ஆற்றுவதுடன் நின்று விடாது அரசியல் ரீதியில் முன் நோக்கிய (proactive) செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். அந்தவகையில் இந்த இமாலய பிரகடனத்துக்கு எதிர்ப்பு அறிக்கையில் கையொப்பம் இட்டிருக்கும் 75 இற்கும் மேற் பட்ட வெகுசன அமைப்புகள் தம்மை ஒரு கட்டமைப்பாக உருவாக்கி கொள்வதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும். எதிர்கால த்தில் செயற்பாடுகளை எவ்வாறு முன் நோக்கியவையாக மேற்கொள்ளலாம் என்று சிந்திக்க வேண்டும்.

---

## வாசகர்களே!

நிமிர்வு இதழை **www.nimirvu.org** இணையமூடாகவும் சமூக ஊடக பக்கங்களான **facebook.com/nimirvu** என்ற முகநூல் ஊடாகவும் **youtube.com** இல் **nimirvu** என்று தேடுவதனூடாகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.

இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம் **(noolaham.org)** இணையத்தின் ஊடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல் **(pdf)** வடிவில் வாசிக்க முடியும்.

# புலிகள் பாசிஸ்டுகளா?



ரஜீவன்

2023 ஐப்பசி 7 இல் ஹமாஸ் நடத்திய தாக்குதல் வெறும் வெற்றிடத்தில் இருந்து வர வில்லை என்று ஐப்பசி 24 இல் நடந்த ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்தில் ஐ.நா. செயலா ளர் நாயகம் அன்டோனியோ குதேரஸ் தெரிவித்திருந்தார். 70 ஆண்டு காலமாக தமது வீடுகளி லிருந்து அநியாயமாக துரத்தப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக 365 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை மட்டும் கொண்ட காசா எனும் திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் வைக்கப் பட்டிருக்கும் 2 மில்லியனுக்கும் மேலான மக்களிடம் இருந்து வரக்கூடிய எதிர்வினை தான் இது என்பதைத் தான் அவர் சொல்கிறார். அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஹமாஸ் செய்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது என்பதையும் அவர் சொல்கிறார். ஒரு மக்கள் கூட்டத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரான அவர்களின் நடவடிக்கைகள் வன்முறை யாக வெடித்து எழுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்று. அந்த மக்களுக்கு நடந்த அநீதிகளை கதைக்காமல் அந்த எதிர்வினையை மட்டும் பயங்கரவாத நடவடிக்கை என்று சுட்டிக் காட்டுவது நியாயமான ஒன்றல்ல.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்க முன்பிருந்தே இன ரீதியான அடக்குமுறைகளை தமிழ் மக்கள் எதிர் கொண்டார்கள். தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அவர்கள் முன்னெ டுத்த சாத்வீக போராட்டங்கள் எல்லாம் வன்முறை கொண்டு அடக்கப்பட்டன. அதன் தொடர்ச்சி யாக எழுந்ததே தமிழ் மக்களின் தனிநாடு கோரிய ஆயுதப் போராட்டம். அந்த ஆயுதப் போராட்டத்தில் கடைசிவரை நிலைத்து நின்றவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். அந்த தனி நாட்டு கோரிக்கைக்கு எதிரான இந்திய ஆக்கிரமிப்பு ஏற்பட்ட பொழுது அதனையும் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். இந்திய இராணுவத்தின் வெளியேற்ற த்துக்கு பின்னர் இலங்கை இராணுவத்துடனான அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

(20ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 28.12.2023 அன்று வெளியிடப்பட்டது.